
# சைவமும் தமிழும்




செந்தமிழ்வாரிதி

முனைவர். இரா. செல்வக்கணபதி


## திருமுறைத் தமிழ்

www.saivamonline.com

# Contact Details

www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 2. திருமுறைத் தமிழ்

## திருமுறைத் தமிழ்

தமிழ்நாட்டில் நிலவும், சைவசமயத்தின் முதன்மை நூல்களைச் சைவத் திருமுறைகள் என்று கூறுவது மரபு. அவற்றை பன்னிரண்டாகப் பகுத்துள்ளனர். சைவ சமயம் சார்ந்து எழுந்த இலக்கியப் பரப்பை அறிமுகப்படுத்தும் முதல்பகுதியில், பழந்தமிழ் நூல்களில் காணப்படும் சைவம் தொடர்பான செய்திகள் திரட்டி வழங்கப்பட்டன. திருமுறைத்தமிழ் என்ற இப்பகுதியில் கி.பி.ஏழாம் நூற்றாண்டுக்கும், பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய, சைவ சமய இலக்கியங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. திருமுறைப் பகுப்பு, அவற்றின் ஆசிரியர்கள், நூல் எழுந்த காலம், நூலின் கட்டமைப்பு, உள்ளீடு, இலக்கிய வரலாற்றில் அந்நூல்கள் வகிக்கும் இடம், சைவ சமய வளர்ச்சியில் அவற்றின் பங்கு முதலியன இனங்காட்டப் பட்டுள்ளன.

## சைவத் திருமுறைகள்

வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு இடங்களில் சங்கப்புலவர்கள் பாடிய தனிப் பாடல்களை எல்லாம் பிற்காலத்தார் தொகுத்து, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப் பெயர் சூட்டி, எண்ணிக்கை காட்டிப் பாதுகாவல் செய்தனர். அவற்றைப் போல், சைவ சமயம் குறித்து



www.saivamonline.com

அருளாளர்கள் பலர், வெவ்வேறு இடங்களில் சென்று, சைவ இறையவர்கள் குறித்துப் பாடிய அருட்பனுவல்கள், ஆங்காங்கே பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன. ஒரு காலத்தில் இவற்றை எல்லாம் திரட்டி, அருளாளர் சிலர் வகுத்து வைத்தனர். அவ்வாறான பல, சைவ சமய நூல்களின் தொகுப்பினையே, சைவத் திருமுறைகள் என்று பெயரிட்டு வழங்கினர். இவை சமயம் சார்ந்த பாடல்களும் அழிந்துபடாது காக்கும் ஒருவகைப் பாதுகாவல் ஆயின.

## திருமுறை, விளக்கம்

திருமுறைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பனுவல்களுக்கும், நூல்களுக்கும் தனித்தனியே பெயர்கள் அமைந்துள்ளன. ஆயினும், இவை அனைத்தையும் உள்ளடக்கி நிற்கும் ஒரு பொதுக் குறியீடாகத் திருமுறைஎன்ற சொல் வழங்கப்பட்டு வருகிறது. திருமுறை என்ற சொற்றொடரை திரு+ முறை என்று பகுக்கலாம். முன்னே அமைந்துள்ள திரு என்ற சொல்லுக்குத் தெய்வத்தன்மை என்பது பொருள். முறை என்ற சொல்லுக்குப் பல பொருள்களை நிகண்டுகளும், தமிழ் அகராதிகளும் கூறுகின்றன. முறை என்ற சொல்லுக்கு நூல் என்ற பொருள் உண்டு. கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார் என்பவர் தம் நூலுள், அவையடக்கம் கூறும்போது,

இறை நிலம் எழுதுமுன் இளைய பாலகன்
முறை வரைவேன் என முயல்வது ஒக்குமால்

என்று பாடியுள்ளார். இத்தொடர்களுள், முறை என்பது நூல் என்ற பொருள் தருதலைக் காணலாம். எனவே, திருமுறை என்ற சொல் தெய்வநூல் அல்லது, தெய்வத்தன்மை உடைய நூல் என்று பொருள்தரும். முறை என்பதற்கு ஒழுங்கு, வரிசை, உறவு, முறையீடு என்ற வேறு பொருள்களும் உள்ளன.



www.saivamonline.com

## திருமுறை கண்டமை

தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருந்த பிற்காலச் சோழர்களில் ஒருவன் அபயகுலசேகரன் என்பான். இவன் முயற்சியால், நம்பியாண்டார் நம்பிகள் என்ற சிவவேதியர், திருமுறைகளைத் தொகுத்துஅளித்தார் என்று கூறப்படுகிறது. தில்லைத் திருக்கோயிலில் திருமுறை ஏட்டுச் சுவடிகள் இருந்தன. அவற்றுள் கறையானால் அழிக்கப்பட்ட ஏடுகள் போக, மீதமுள்ள ஏடுகளே தொகுத்து வைக்கப்பட்டன. ஒன்று முதல் பதினொன்று வரையிலான திருமுறைகளை நம்பி தொகுத்தார் என்றும், அவர் காலத்துக்குப்பின், சேக்கிழாரின் பெரியபுராணம், பன்னிரண்டாம்திருமுறையாகஇணைத்துக் கொள்ளப்பட்டது என்றும் தெரிகிறது. இவற்றுக்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பெண் ஒருவர், பண்முறை கண்டு இசை அமைத்தார். சோழர்கள் திருமுறைகள் அழியாது இருக்க அவற்றைச் செப்புப் பட்டயங்களில் பொறித்துப் பாதுகாத்தனர் என்று தெரிகிறது. முன்குறித்தவாறு, திருமுறைகளின் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டிற்கும் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமாகும். திருமுருகாற்றுப்படை கடைச் சங்க காலத்தது. காரைக்காலம்மையார் தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டவர். மாணிக்கவாசகர், திருமூலர் காலம் குறித்துக் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

## திருமுறைகளின் பெருமை

திருமுறைகளுக்குப் பெருஞ்சிறப்பு உண்டு. சைவர்கள் இவற்றை, இறைவன் நூல் என்றும், தமிழ் வேதம் என்றும் கருதிப் போற்றி வருகின்றனர். வேதம் மற்றும் சைவ ஆகமங்களின் சாரமாகவே திருமுறைகள் அமைந்தன. .இவை சிவனின் அடையாளங்கள், ஆற்றல்கள், அருளிப்பாடுகளை



www.saivamonline.com

விளக்கி நிற்கின்றன. சைவ சித்தாந்த சாத்திரங்கள் தோன்றுவதற்கு அடிப்படையான இறை, உயிர், தளை இயல்புகள், திருமுறைகளுள் விரித்துரைக்கப் பட்டுள்ளன. சில பதிகங்கள், அற்புத நிகழ்வுகளோடு இணைந்தவை. அவற்றைப் பக்தியோடு ஓதினால், உரிய நன்மையை அவை தரும் என்ற நம்பிக்கை, சைவர்களிடையே நிலவி வருகிறது. தமிழ்நாட்டின் 500 ஆண்டுக்கால சமய- சமூக வரலாற்றை அறியத் திருமுறைகள் துணையாகின்றன. தமிழ் இசை, கலை, தமிழகப் பெண்மை உயர்ச்சிபெறத் திருமுறைகள் பெரும்பங்கு ஆற்றியுள்ளன. சிவன் சந்நிதிகளில், பூசைக் காலங்களில், திருமுறை ஓதி வழிபடும் வழக்கம் நிலவுகிறது. திருமுறை விண்ணப்பம் செய்வாரை ஓதுவார் என்று கூறுவர். கல்வெட்டுகள் இவர்களைப் பிடாரர்கள் என்று குறிக்கிறது.

## திருமுறை ஓதப்படும் முறை

திருமுறைகளை ஓதுவதில் சில நெறிமுறைகளைச் சைவம் வகுத்துள்ளது. சிவதீட்சை பெற்றவர்களே, நீராடி, தூய ஆடை உடுத்து, வெண்ணீறு அணிந்து, உரிய பண் அடைவோடு இறைவன் முன்பு திருமுறை ஓதுதல் வேண்டும். ஒவ்வொரு காலப் பூசையிலும் திருமுறை ஓதப்பட வேண்டும். அந்தந்தத் தலத்துக்கு உரிய பனுவல்களைப் பாடுவது சிறப்பு. திருமுறை விண்ணப்பிக்கத் தொடங்கும் முன்பும், நிறைவு செய்த பின்பும் 'திருச்சிற்றம்பலம்' என உச்சரித்தல் வேண்டும். தேவாரமாயின் பதிகம் முழுவதையும் பாட வேண்டும். காலம் கருதி இயலாதபோது பதிகத்தின் முதற் பாடலையும், நிறைவுப் பாடலையும் பாடலாம். ஒவ்வோர் திருமுறையிலிருந்தும் குறைந்தது ஒவ்வொரு பாடலையாவது பாடுவது நலம். இயலாத நிலையில் ஒரு தேவாரப் பாடல், ஒரு திருவாசகப் பாடல், ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பாவிலிருந்து ஒரு பாடல், திருப்பல்லாண்டிலிருந்து ஒன்று, பெரியபுராணப் பாடல் ஒன்று என்று ஐந்து பாடல்களைப் பாடும் மரபு உண்டு.



www.saivamonline.com

இதற்குப் பஞ்சபுராணம் பாடுதல் என்று பெயர். சிவன் எழுந்தருளுகையில் திருமுறைகள் முன்னாகவும், வேதங்கள் பின்னாகவும் ஓதப்படும் மரபு நிலவி வருகிறது. சிவ பூசையின் நிறைவில், முதல் மரியாதை ஓதுவார்களுக்கே வழங்கப்பட்டு வருதல் திருமுறைகளின் பெருமைக்குச் சான்றாக உள்ளது.

## பன்னிரு திருமுறைகள்

திருஞானசம்பந்தர் பாடிய இசைப்பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று திருமுறைகளும் திருநாவுக்கரசர் பாடியன. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடல்கள் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இவ்வேழு திருமுறைகளையும் தேவாரம் என்று கூறுதல் மரபு. திருஞானசம்பந்தர் தேவாரத்தைத் திருக்கடைக்காப்பு என்றும், திருநாவுக்கரசர் பாடல்களை மட்டும் தேவாரம் என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பனுவல்களைத் திருப்பாட்டு என்றும் கூறும் மரபும் நிலவி வருகிறது. ஏழு திருமுறைகள் பண்முறையில் அமைந்தன. தல வரிசையில் ஒரு தேவாரத் தொகுப்பும் உண்டு. அதனை அடங்கன்முறை என்பர். மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாத் தொகுக்கப்பட்டுள்ளன.

## தேவாரத் திருவாசகங்கள்

பன்னிரு திருமுறைகளுள் முதல் எட்டுத் திருமுறைகளைத் தேவாரத் திருவாசகங்கள் என்று கூறுவது சைவ மரபு. முதல் ஏழு திருமுறைகளைப் பாடியவர் மூவர். காலவரிசைப்படி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என அவர்களைக் குறிப்பர். இவர்களைத் தேவார மூவர் என்றும், மூவர் முதலிகள் என்றும் குறித்தல் வழக்கு. இவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பை மூவர் தேவாரம் எனப் போற்றுவர். தேவாரத் திருவாசக



www.saivamonline.com

ஆசிரியர்களை நால்வர் என்றும், நால்வர் பெருமக்கள் என்றும் சைவசமயத்தினர் குறிப்பிடுவர்.

## தேவாரம் தொகுக்கப்பெற்றமை

தேவாரத் திருமுறைகளைத் தொகுத்து முறைப்படுத்தியவர் நம்பியாண்டார் நம்பிகள் என்பவர். இவர் தில்லை (சிதம்பரம்)யை அடுத்த திருநாரையூரில் வாழ்ந்தவர். தேவார ஆசிரியர்கள் சைவத் தலங்களுக்கெல்லாம் சென்று பாடிய இசைப் பாடல்கள் வெவ்வேறு இடங்களில் தொகுத்து வைக்கப்பட்டிருந்தன. அபயகுலசேகரன் என்ற சோழமன்னன் வேண்டுகோளை ஏற்று, விநாயகர் வழிகாட்ட, தில்லையில் இருந்த தேவார ஏடுகளைக் கண்டெடுத்து, நம்பியாண்டார் நம்பிகள் முதல் ஏழு திருமுறைகளைத் தொகுத்து வழங்கினார். திருஎருக்கத்தம்புலியூரில் வாழ்ந்து வந்த, திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த, இறையருள் பெற்ற பெண் ஒருவர் தேவாரப் பாடல்களுக்குப் பண்களை வகுத்து வழங்கினார். தேவாரப் பண்களின் பெயர்களும், அவற்றின் சந்த வேறுபாடுகள் குறித்த கட்டளைகளையும், உமாபதி சிவாசாரியார் இயற்றிய திருமுறை கண்ட புராணம் விரித்து உரைக்கிறது. மூவர் தேவாரச் சிறப்பை,

எரியினிடை வேகாது ஆற்றெதிரே ஓடும்
என்புக்கும் உயிர் கொடுக்கும் - இடுநஞ்சு ஆற்றும்
கரியை வளைவிக்கும்; கல்மிதக்கப் பண்ணும்;
கராம்மதலை கரையில்உறக் காற்றும் காணே (17)

எனத் திருமுறைகண்ட புராணம் சிறப்பிக்கிறது.

## தேவாரம்- பண்முறை - தலமுறை

பத்துப்பாடல்கள் கொண்ட தொகுப்பைப் பதிகம் என்று கூறுவர். இது முன்னரே விளக்கப்பட்டது. மூவர்



www.saivamonline.com

தேவாரங்கள் பதிக அமைப்பை உடையன. திருஞானசம்பந்தர் பதிகங்களில், பதிகத்தை ஓதுவதால் விளையும் பயன் கூறும் ஒரு பாடலும், பதிக இறுதியில் இடம் பெறச் செய்யப்பட்டுள்ளது. இதனைத் திருக்கடைக்காப்பு என்று கூறுவர். மற்றைய இருவர் பதிகங்களில் சிலவற்றைத் தவிர ஏனைய பதிகங்கள் பத்துப் பாடல்கள் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன. தேவார மூவரும் பல சிவத் தலங்களில் சென்று பாடியிருந்தாலும், அவற்றை எல்லாம் தொகுத்துப் பண்முறையில் ஒழுங்கு செய்துள்ளனர். இதனைப் பண்முறை என்று கூறுவர். ஏழு திருமுறைகள் என்ற தொகுப்பும் பண்முறையிலேயே அமைந்தது. அதாவது, ஒரு ஆசிரியர் வெவ்வேறு தலங்களில் பாடியிருந்தாலும், ஒரே பண்ணில் அமைந்த பதிகங்கள் தொகுக்கப்பட்டு திருமுறைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## தேவாரப் பண்கள்

தேவாரத்தில் இடம்பெற்றுள்ள பண்கள் 21. இதனைப் 'பந்தத்தால்' என்று தொடங்கும் திருக்கழுமலம் (சீகாழி) பதிகத்தில் திருஞானசம்பந்தர் குறித்துள்ளார். பின்வந்தோர் பண்களை 24 என்றும், 27 என்றும் பிரித்துக் கூறினர். இவற்றைப் பகற் பண்கள், இராப் பண்கள், பொதுப் பண்கள் என மூன்றாகப் பிரிப்பர். பகற்பண்கள் பத்து, இராப் பண்கள் எட்டு, பொதுப் பண்கள் மூன்று. இவற்றைக் கீழே உள்ள அட்டவணையில் விரிவாகக் காணலாம்.

| பகற்பண்கள்-10 | இராப்பண்கள்-8 | பொதுப்பண்கள் -3 |
| --- | --- | --- |
| 1. புறநீர்மை | 1. தக்கராகம் | 1.செவ்வழி |
| 1. காந்தாரம் - (பியந்தைக் காந்தாரம்) | 2. பழந்தக்கராகம் | 2.செந்துருத்தி |
| 3. கௌசிகம் | 3. சீகாமரம் | 3.திருத்தாண்டகம் |
| 4. இந்தளம் | 4. கொல்லி | |



www.saivamonline.com

| | | |
|---|---|---|
| திருக்குறுந்தொகை | கொல்லிக் கௌவாணம் திருநேரிசை திருவிருத்தம் | |
| 5. தக்கேசி | 5. வியாழக்குறிஞ்சி | |
| 6. நட்டராகம் | 6. மேகராகக்குறிஞ்சி | |
| 7. நட்டபாடை | 7. குறிஞ்சி | |
| 8. பழம் பஞ்சுரம் | 8. அந்தாளிக்குறிஞ்சி | |
| 9. காந்தார பஞ்சமம் | | |
| 10. பஞ்சமம் | | |

இவற்றுள் செவ்வழிப்பண் திருஞான சம்பந்தரால் மட்டுமே பாடப்பட்டுள்ளது. செந்துருத்தியைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மட்டுமே பாடியுள்ளார். திரு நேரிசை, திருவிருத்தம், திருக் குறுந்தொகை, திருத்தாண்டகம் என்பன திருநாவுக்கரசரால் மட்டுமே பாடப்பட்டுள்ளன.

## திருஞானசம்பந்தர்

தேவார மூவருள் திருஞானசம்பந்தரே முதலாமவர். இவர் சீகாழிப் பதியில் சிவபாத இருதயர் என்பவருக்கும், பகவதி அம்மையாருக்கும் மகவாக அவதரித்தவர். அந்தணர் குலத்தில் கௌணியர் கோத்திரத்தில் உதித்தவர். மூன்றாவது வயதில் உமையம்மையால் ஞானப்பால் ஊட்டப்பெற்று ஞானசம்பந்தரானவர். அக்காலை இவர் பாடிய பதிகமே தோடுடைய செவியன் என்று தொடங்குவது. இவர் அழுகையால் வேதநெறி தழைத்தது. சைவத்துறைகள் விளக்கமுற்றன. அடியார் மரபு உய்தி பெற்றது. இவர் வாழ்வில் சிவன் அருளால் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. இறந்த வணிகனைச் 'சடையாய்' என்று தொடங்கும் பதிகம் பாடி உயிர்பெறச் செய்தார். திருவீழிமிழலையில் படிக்காசுப் பெற்றார். திருமறைக்காட்டில் மறைக்கதவை மீண்டும் மூடச் செய்தார். கோள்களால் சிவன் அடியார்களுக்குத் தீங்கு வாராது



www.saivamonline.com

என்று, 'வேயுறு தோளிபங்கன்' என்ற பதிகம் பாடி நம்பிக்கை ஊட்டினார். மதுரையில் அனல் புனல் வாதங்கள் செய்து சமணர்களை வெற்றி கொண்டார். மட்டிட்ட புன்னையம் கானல் என்ற பதிகம் பாடி இறந்த பூம்பாவை என்ற பெண்ணின் எலும்பை மீண்டும் பெண் உருவம் கொள்ளச் செய்தார். பதினாறு வயதில் தம் திருமணநாளில், 'நல்லூர்ப் பெருமணம்' என்ற பதிகம் பாடித் துணைவியாரோடு ஆச்சாள்புரத்தில் சிவசோதியில் கலந்து மறைந்தார். இவர் மறைந்த நாள் ஒரு வைகாசி மூலம் என்பர். இவர் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

## முதல் திருமுறை

திருஞானசம்பந்தர் அருளிய பதிகங்களுள் இன்று நமக்குக் கிடைத்துள்ளவை 384 பதிகங்கள். பாடல்தொகை 4158. இவற்றுள் முதல் திருமுறையுள் 136 பதிகங்களும், 1469 பாடல்களும் இடம் பெற்றுள்ளன. 96 தலங்கள் இத்திருமுறையில் தேவாரப் பாடல் பெற்றுச் சிறந்துள்ளன. 1.நட்டபாடை(22), 2. தக்கராகம்(24), 3. பழந்தக்கராகம்(8), 4.தக்கேசி(12), 5.குறிஞ்சி(24), 6.வியாழக்குறிஞ்சி(25), 7.மேகராகக் குறிஞ்சி(7) ஆகிய 7 பண்களும், யாழ்மூரி என்ற ஒருபதிகமும் முதல் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. ஒருவகையில் யாழ்மூரி மேகராகக் குறிஞ்சியுள் அடங்கும். இத்திருமுறையுள் ,

விளையாததோர் பரிசில்வரு
பசு,பாச வேதனை ஒண்
தளையாயின தவிர அருள் தலைவன் (121)

என்ற திருமுதுகுன்றத்தில் (விருத்தாசலம்) பாடிய பதிகத்தில், சைவ சித்தாந்தக் குறிப்புகளை ஞானசம்பந்தர் பதிவு செய்துள்ளார். திருவீழிமிழலைப் பதிகத்தில்,



www.saivamonline.com

ஈறாய் முதல் ஒன்றாய் இரு
பெண் ஆண் குணம் மூன்றாய்
மாறா மறை நான்காய் வரு
பூதம் அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழ் ஓசையொடு
எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன்ஆனான் இடம்
வீழிம் மிழலையே (109)

என எண் அலங்காரம் அமைய, சிவபெருமானின் குண இயல்புகளைப் பதிவு செய்கிறார்.

## இரண்டாம் திருமுறை

இரண்டாம் திருமுறையுள் 122 பதிகங்களும், 1331 தேவாரப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இவை 90 சிவத்தலங்களில் பாடப் பெற்றுள்ளன. 1.இந்தளம் (39), 2.சீகாமரம்(14), 3.காந்தாரம்(29), 4.பியந்தைக் காந்தாரம் (14), 5. நட்டராகம்(16),6.செவ்வழி(10) என ஆறு பண்கள் இரண்டாம் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. பல தலங்களின் பெயர்களையும் இணைத்துப் பாடிய திரு சேத்திரக்கோவை, இராமாயணக் குறிப்புடைய, 'கள்ளார்ந்த பூங்கொன்றை' என்று தொடங்கும் புள்ளிருக்கு வேளூர் (வைத்தீஸ்வரன்கோயில்) பதிகம், 'மந்திரமாவது நீறு' என்று தொடங்கும் திருநீற்றுப் பதிகம் முதலிய, அரிய பெரிய பதிகங்கள் இரண்டாம் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. பாம்பு கடித்து இறந்த வணிகனை உயிர் பெறச் செய்து திருஞானசம்பந்தர் பாடிய திருமருகல் பதிகத்தின் முதற்பாடல்,

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்



www.saivamonline.com

உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே (1655)

என அகப்பொருள் குறிப்புடையதாய், செவிலி கூற்றாகப் பாடப்பட்டுள்ளது. உலக நிலையாமையை விளக்கி அவர் திருவாரூரில் பாடிய,

தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டுஒரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால்
ஏழை நெஞ்சே
அந்தண் ஆரூர் தொழுது உய்யலாம் மையல்கொண்டு
அஞ்சல் நெஞ்சே (2325)

என்னும் பாடல் அரிய பொருள் நுட்பம் கொண்டது.

## மூன்றாம் திருமுறை

திருஞானசம்பந்தரின் மூன்றாம் திருமுறையுள் 126 பதிகங்களும், 1358 தேவாரப் பனுவல்களும் இடம் பெற்றுள்ளன. மூன்றாம் திருமுறையுள் பாடல்பெற்ற சிவத்தலங்கள் 84 ஆகும்.

இத்திருமுறையுள், 1. காந்தார பஞ்சமம்(23), 2. கொல்லி(18), 3.கொல்லிக் கௌவாணம்(1), 4.கௌசிகம்(15), 5. பஞ்சமம்(10), 6.சாதாரி(33), 7.பழம்பஞ்சுரம்(17), 8.புறநீர்மை(6), 9.அந்தாளிக் குறிஞ்சி (12) முதலிய ஒன்பது பண்களில் பதிகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. திருவாவடுதுறையில்,சிவபெருமான்ஆயிரம் பொன் வழங்கியபோது திருஞானசம்பந்தர் பாடிய, இடரினும் தளரினும் என்று தொடங்கும் பதிகமும், நமசிவாய என்ற ஐந்தெழுத்தின் பெருமை பேசும்,



www.saivamonline.com

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செ ழுத்துமே

என்ற அரிய பாடலை முதலாகக் கொண்ட பஞ்சாக்கரத் திருப்பதிகமும் இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ளன.

## புதிய யாப்பு வகை

மதுரையில் மங்கையர்க்கரசியாருக்கு நம்பிக்கை ஊட்டிப் பாடிய பதிகம், மானினேர் வாழி மாதராய் என்ற தொடக்கம் கொண்டது. நமச்சிவாயத் திருப்பதிகம், வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் என்ற தொடக்கம் கொண்ட திருப்பாசுரம். திருமுறைகள் தொகுக்கப்பட்டபோது அவற்றுள் இடம்பெறாது திருவிடைவாய் என்ற தலத்துக் கல்வெட்டிலிருந்து, மறியார் கரத்து எந்தை என்ற பதிகம் கண்டெடுத்து இணைக்கப்பெற்றது. இவையாவும் மூன்றாம் திருமுறைக்கு அணிசேர்ப்பன.திரு இருக்குக் குறள், திருவிராகம், திருமுக்கால், நாலடிமேல் வைப்பு, கூடற்சதுக்கம், ஈரடி, திருஇயமகம், மாலைமாற்று முதலாய புதிய யாப்பமைந்த பதிகங்களும் திருஞானசம்பந்தரால் இத்திருமுறையுள் பாடப்பெற்றுள்ளன.

## திருநாவுக்கரசர்

தேவார மூவருள் இரண்டாமவர் திருநாவுக்கரசர். இவர் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரில் அவதரித்தார். வேளாளர் குலத்தில், குறுக்கையர் குடியில் வந்த புகழனார் மாதினியார் என்ற பெற்றோரின் மகவாகத் திலகவதியாருக்குப் பின்வந்தவர். இளமைப் பெயர் மருள்நீக்கியார். சமண சமயத்தில் தலைமை பெற்றபோது அமைந்தது தருமசேனர் என்பது. திருவதிகையில் சிவபெருமான் வழங்கியது



www.saivamonline.com

நாவுக்கரசு என்பது. திருஞானசம்பந்தர் முறையிட்டு அழைத்தது அப்பர் என்பது. சமணம் சென்று சைவம் மீண்டபோது திருநாவுக்கரசர் பாடிய முதல் திருப்பதிகம், கூற்றாயினவாறு என்று தொடங்குவது. பல்லவ வேந்தன் அழைப்பை மறுத்துப் பாடியது, நாமார்க்கும் குடியல்லோம் என்று அமைந்தது. அப்பூதியடிகளின் மகனை உயிர்பெறச் செய்தது. திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றது. திருமறைக்காட்டில் மறைக்கதவம் திறந்தது. கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் கண்டு மகிழ்ந்தது. திருப்புகலூரில் இறைவன் திருவடிகளில் ஒரு சித்திரைச் சதய நாளில் கலந்தருளியது என்பன இவரது வரலாற்றில் குறிக்கத்தக்க நிகழ்வுகள். திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரோடு ஒரு காலத்தில் வாழ்ந்தவர். இவர் காலம் கி.பி.7ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

## நான்காம் திருமுறை

திருநாவுக்கரசர் அருளியனவாக இன்று கிடைத்துள்ள பதிகங்கள் 312. தேவாரப்பாடல்களின் எண்ணிக்கை 3066. திருநாவுக்கரசரின் நான்காம் திருமுறையில் இடம்பெற்றுள்ள பதிகங்களைத் திருநேரிசை என்று குறிப்பர். இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ள பதிகங்கள் 113. பாடல்கள் 1070. நான்காம் திருமுறையுள் 50 சிவதலங்களுக்கு உரிய பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. 1.கொல்லி(1), 2.திருநேரிசை(58), திருவிருத்தம்(34)(இவ்விருவகைப் பாடல்களும் கொல்லிப் பண்ணில் சேர்க்கப்பட்டுள்ளன). 3.காந்தாரம்(6), 4. பியந்தைக்காந்தாரம்(1), 5.சாதாரி(1), 6.காந்தார பஞ்சமம்(2), 7.பழந்தக்கராகம்(2), 8. பழம் பஞ்சுரம்(2),9.சீகாமரம்(2), 10.குறிஞ்சி(1) என நான்காம் திருமுறையுள் 10 பண்கள் இடம் பெற்றுள்ளன. இத்திருமுறையில் அற்புதத் திருப்பதிகங்கள் ஒன்பது இடம் பெற்றுள்ளன. சைவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்படும் இத்திருப்பதிகங்கள் குறித்த



www.saivamonline.com

விளக்கங்களைக் கீழே உள்ள அட்டவணை விளக்கி நிற்கிறது.

| அற்புதப்பதிகம் | தலம் | பதிகத்தொடக்கம் |
|---|---|---|
| சூலைநோய் நீக்கியது | திருவதிகை | கூற்றாயினவாறு |
| நீற்றறையில் பிழைத்தது | திருப்பாதிரிப்புலியூர் | மாசில் வீணையும் |
| யானை இடறவந்த போது பாடியது | திருப்பாதிரிப்புலியூர் | |
| சுண்ணவெண்சந்தன. | கல் மிதக்கப்பாடியது | |
| திருப்பாதிரிப்புலியூர் | சொற்றுணைவேதியன் | |
| மறைக்கதவம் திறப்பித்தது | திருமறைக்காடு | பண்ணின் நேர்மொழி |
| அப்பூதி மகனை உயிர்ப்பித்தது | திங்களூர் | ஒன்றுகொலாம் |
| சூல-இடபக்குறி பாடிப்பெற்றது | திருச்சத்திமுற்றம் | கோவாய்முடுகி |
| திருவடி சூட்டப்பெற்றது | திருநல்லூர் | நினைந்து உருகும் |
| கயிலைக்காட்சி கண்டது | திருவையாறு | மாதர் பிறைக்கண்ணி |

## நான்காம் திருமுறை : சிலகாட்டுகள்

திருநாவுக்கரசர் பாடல்களில் பத்திமையும், அனுபவ முதிர்வும், தன்னிலை இரக்கக் குறிப்பும் மிகுந்திருக்கும். எடுத்துக்காட்டுக்களாகச் சில தொடர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன் (4164)

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை (4169)



www.saivamonline.com

கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
மயில்ஆலும் ஆருரரைக்
கையினால் தொழாது ஒழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வனேனே (4200)

உற்றார் ஆருளரோ உயிர்கொண்டு போம்பொழுது
குற்றாலத்து உறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் ஆருளரோ? (4249)

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே (4269)

சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்து இருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந்து ஆடும் ஐயாறன் அடித்தலமே (5041)

நான்காம் திருமுறையில், தலங்களில் பாடிய பதிகங்களோடு, திருநாவுக்கரசர் பாடிய பொதுப்பதிகங்கள் பலவும் இடம் பெற்றுள்ளன.

## ஐந்தாம் திருமுறை

திருநாவுக்கரசரின் ஐந்தாம் திருமுறையுள் இடம் பெற்றுள்ள பதிகங்களைத் திருக்குறுந்தொகை எனக் குறித்துள்ளனர். இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ள பதிகங்கள் 100. பனுவல்கள் 1015. பாடப்பெற்ற சிவத்தலங்கள் 76. இத்திருமுறைப் பாடல்களை இயல்தமிழ் பாடல்களாகவே கொள்ள வேண்டும். ஆயினும், நடைமுறையில் இவை இந்தளப் பண்ணில் பாடப்பெற்று வருகின்றன. எளிய இனிய சொற்களால் இத்திருமுறைப் பாடல்கள் அமைந்துள்ளன.



www.saivamonline.com

சைவப் பெருமக்கள் பெரிதும் போற்றும் அரிய பல தொடர்களும், பாடல்களும், பதிகங்களும் இத்திருமுறையுள் அமைந்துள்ளன.

கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழல்பாவை நல்லாரினும்
தனிமுடிகவித்து ஆளும் அரசினும்
இனியன் தன் அடைந்தார்க்கு இடைமருதனே (5372)

எனச் சிவபெருமானின் அருள்பாலிக்கும் கருணையும்,

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே (5440)

என இறையடிவர்களைப் பகுத்து ஆய்ந்து அருளும் திறமும்,

பெருகலாம் தவம் பேதமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரம்ஆயதோர் ஆனந்தம்
மருகலான்அடி வாழ்த்தி வணங்கவே (6092)

என இறைவன் திருவடியை வணங்கினால் பெறும் சிறப்புக்களையும்,

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே (6118)

இறைவனை வாழ்த்தி வணங்காது நாள்களைக் கடத்துவார் மீது பரிவுகொண்டு, தன்மேல் வைத்துப்பாடும் கருணையும்,

விறகில் தீயினன் பாலில்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்



www.saivamonline.com

உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே (6121)

எனச் சிவபரம்பொருளை அடைதற்கு உரிய நெறிமுறைகளை உணர்த்தும் பனுவல்களும் என, ஐந்தாம் திருமுறை அரிய சைவ சமயக் களஞ்சியமாக அமைந்துள்ளது.

## ஆறாம் திருமுறை

திருநாவுக்கரசரின் ஆறாம் திருமுறையைத் திருத்தாண்டகம் எனக்கூறுதல் வழக்கு. இவரைத் தாண்டக வேந்தர், தாண்டகச் சதுரர் எனப் பின்வந்தோர் போற்றினர். இதில் 99 பதிகங்களும் 981 திருத்தாண்டகங்களும் இடம்பெற்றுள்ளன. 65 சிவத்தலங்களில் பாடப்பட்ட பதிகங்களும், பல பொதுப் பதிகங்களும் இதனுள் இடம் பெற்றுள்ளன. தாண்டகம் என்பது ஒவ்வோர் அடியிலும் அறுசீர்களோ அல்லது எட்டுச் சீர்களோ அமையக் கடவுளையோ அல்லது ஆண்மக்களையோ நான்கு அடிகள் அமையப் பாடும் அமைப்புடையது. அறுசீரான் அமைவது குறுந்தாண்டகம் . எண்சீரான் அமைவது நெடுந்தாண்டகம். தாண்டக இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் என்ற இலக்கண நூல்,

மூவிரண் டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளரைப் புகழ்வன தாண்டகம் அவற்றுள்
அறுசீர் குறியது; நெடியது எண்சீராம்

என விளக்கி உரைக்கிறது. முதல்முதலில் தமிழில் இந்தயாப்பினைக் கையாண்டவர் திருநாவுக்கரசரே.

தலைவராம் பிள்ளை யாரும்
தாண்டகச் சதுரராகும்
அவர்புகழ் அரசும் கூட
அங்கு எழுந்து அருளக் கண்டு



www.saivamonline.com

எனச் சேக்கிழாரும்,

வெள்ளேறு உடையான் தனக்கு அன்புசெய்
திருத்தாண்டக வேந்தே

எனச் சிவப்பிரகாசரும் நாவுக்கரசரைத் தாண்டக யாப்புடன் இணைத்துப் போற்றியுள்ளனர்.

## பொதுத் திருத்தாண்டகங்கள்

திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம் பெருஞ்சிறப்பு மிக்கது. தமிழ்நாட்டுச் சைவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்படுவது. எளிய இனிய சொற்களால் இயற்றப் பட்டுள்ளது. வடமொழி வேதமந்திரங்களுக்கு இணையாகத் தமிழில் போற்றிப் பனுவல்கள் பலவற்றைக் கொண்டு இயங்குவது. நெஞ்சத்தை விட்டு அகலாத பல அரிய தொடர்களை உள்ளடக்கியது. தலங்களுக்கு உரியன அல்லாது பல பொதுத் தாண்டகப் பதிகங்களும் ஆறாந் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. கீழ்க்கண்ட அட்டவணையில் பொதுத் திருத்தாண்டகங்கள் குறித்த செய்திகள் திரட்டித் தரப்பட்டுள்ளன.

| பொதுத்திருத்தாண்டகப் பெயர் | தொடக்கம் | பதிக எண். |
|---|---|---|
| பலவகைத் திருத்தாண்டகம் | நேர்ந்து ஒருத்தி | 1 |
| நின்ற திருத்தாண்டகம் | இருநிலனாய் | 1 |
| தனித் திருத்தாண்டகம் | அப்பன் நீ<br>ஆமயந்தீர் | 2 |
| திருவினாத் திருத்தாண்டகம் | அண்டங்கடந்த | 1 |
| மறுமாற்றத் திருத்தாண்டகம் | நாமார்க்கும் | 1 |

திருத்தாண்டகத்தில், தமிழ்நாட்டுச் சைவர்களால் தலைமேல் வைத்துப் போற்றப்படும் அரிய தொடர்கள் பல இடம் பெற்றுள்ளன. ஒரு சிலவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.



www.saivamonline.com

*பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்*
*பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே (6244)*

*நினைந்து உருகும் அடியாரை நைய வைத்தார் (6380)*

*மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்*
*தீராநோய் தீர்த்தருள வல்லான் (6791)*

*நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி*
*நற்கனகக் கிழி தருமிக்கு அருளி னோன்காண்*
*(7000)*

*வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்*
*ஆனவன் காண் (7104)*

*எந்தையார் திருநாமம் நமச்சி வாய*
*என்று எழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே*
*(7162)*

*அங்கமெலாம் குறைந்து அழுகு தொழு நோயராய்*
*ஆவுரித்துத் தின்று உழலும் புலைய ரேனும்*
*கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்*
*அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே (7182)*

*நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் (7205)*

இவைபோன்ற மேலும் பல அரிய தொடர்கள் ஆறாம் திருமுறையுள் இடம்பெற்றுள்ளன.

## அரிய திருத்தாண்டகங்கள்

திருநாவுக்கரசரின் திருத்தாண்டகத்தில் அகத்துறைத் தழுவி அமைந்த பதிகங்களும் இடம் பெற்றுள்ளன.

*முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்*
*மூர்த்தி அவன்இருக்கும் வண்ணம் கேட்டாள்*
*பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்*



www.saivamonline.com

*பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்*
*அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்*
*அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை*
*தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே (6501)*

இதனைப் போல், சரியை நெறி குறித்த பாடல்களும் திருத்தாண்டகத்துள் இடம் பெற்றுள்ளன. இறைவனை அடைவதற்கு உரிய நால்நெறிகளுள் ஒன்று தொண்டு நெறி. சிவனுக்கும், சிவன் அடியார்களுக்கும் செய்யும் அன்புப் பணிகளை வடமொழியில் சரியை என்பர். நால்வருள் சரியை நெறி நின்றவர் திருநாவுக்கரசர். திருவாரூர்த் திருத்தாண்டகம் ஒன்றில் நெஞ்சுக்கு உரைப்பதுபோல், திருக்கோயிலுக்குச் செய்ய வேண்டிய தொண்டுகளை நாவுக்கரசர் பட்டியல் இட்டுள்ளார்.

*நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்*
*பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்*
*தலை ஆரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்*
*சங்கரா செயபோற்றி போற்றி என்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீ என்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லே (6555)*

## போற்றித் திருத்தாண்டகங்கள்

இறைவன் திருமுன்பு நீரும் பூவும் கொண்டு சென்று, தாமே அடியார் இறைவனை நீராட்டி, பூப்பெய்து, ஆரத்தழுவி வழிபடும் உரிமை முற்காலத்தில் தமிழ்நாட்டில் நிலவியிருந்துள்ளது. மலர் தூவி வழிபடும் போது, இறைவனைப் புகழ்ந்து போற்றும் அரிய பாடல்களைத் திருநாவுக்கரசர் ஆக்கி அளித்துள்ளார். வடமொழி



www.saivamonline.com

மந்திரங்களுக்கு இணையான, இவற்றைச் சிவபெருமான் திருமுன்பு ஓதி வழிபடும் முறைமை மீண்டும் இன்று தமிழகத் திருக்கோயில்களில் மலர்ந்துள்ளது. அவ்வாறான போற்றித் திருத்தாண்டகங்கள் சிலவற்றைக் கீழே காணலாம்.

கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
அல்லல்அறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரம் எரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றிபோற்றி (6563)

எனவரும் திருவாரூர்த் திருத்தாண்டகமும்,

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும் சொல்ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும்தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

எனவரும் திருக்கயிலாயத் திருத்தாண்டகமும் மனம் கொண்டு போற்றத்தக்கன.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருமுறை ஆசிரியர்களுள் மூன்றாமவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவர் அருளிய பனுவல்கள் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவர் திரு முனைப்பாடி நாட்டில், ஆதி சைவர் குலத்தில் சடையனார்,



www.saivamonline.com

இசைஞானியார் அருமகவாக அவதரித்தார். இவர் பிள்ளைத் திருநாமம் ஆரூரர் என்பது. திருமணநாளில் சிவபெருமான் புத்தூரில் தடுத்து ஆட்கொண்டான். இறைவன் விரும்பியவாறு திருவெண்ணெய்நல்லூரில் பித்தா பிறை சூடி என்று சிவபெருமான் அடி எடுத்துக் கொடுக்க இவர் பதிகப் பாமாலைகள் பாடத் தொடங்கினார். திருவதிகையில் திருவடி தீட்சை பெற்றார். திருவாரூரில் இறைவன் தம்மை இவருக்குத் தோழமை தந்தான். திருவாரூரில் பரவையாரையும், திருவொற்றியூரில் சங்கிலியாரையும் மணந்தார். சிவபெருமான் இவருக்காக வீடுகள் தோறும் சென்று பிச்சை ஏற்று உணவு படைத்தார். பரவை பால் ஊடல் தீர்க்கத் தூது சென்றார். சேரமான் பெருமாள் நாயனாரும், கோட்புலியாரும் பிறரும், இவர் காலத்தவர். முதலை வாய்ப் பாலனை இவர் பதிகம் பாடி மீட்டார். வன்தொண்டன் என்பதும் இவர் பெயர்களுள் ஒன்று. திருத்தொண்டத் தொகை இவரால் அருளப்பட்டது. ஆடிச் சுவாதிநாளில் இவர் வெள்ளானை மீது ஏறிக் கயிலை சேர்ந்தார். சகமார்க்கம் என்றும் யோகநெறி என்றும் கூறப்படும் தோழமை நெறியில் வாழ்ந்தவர் இவர். இவர் உலகில் வாழ்ந்திருந்த காலம் 18 ஆண்டுகள் என்பர். இவர் காலம் கி.பி.9 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்று கூறப்படுகிறது.

## திருத்தொண்டத் தொகை

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய ஏழாம் திருமுறையுள் 100 பதிகங்களும் 1026 அருட்பாடல்களும் இடம் பெற்றுள்ளன. 96 திருத்தலங்கள் இவர் பாடல் பெற்றுச் சிறந்துள்ளன. இவர் 17 பண்களில் பாடியுள்ளார். இவர் அவதரித்த நோக்கமே திருத்தொண்டத் தொகை என்ற அடியார் வரலாறு கூறும் பதிகம் பாடுவதற்கென்று சேக்கிழார் குறிக்கிறார்.



www.saivamonline.com

மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப்
போதுவான் (பெரியபுராணம் -35)

சுந்தரர் வருகை அமைந்தது என்பது சேக்கிழார் எண்ணம்.

திருத்தொண்டத்தொகையின் சிறப்பினைப் பெரியபுராணம் பலவாறு விரித்துரைக்கிறது.

ஈசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகை

(பெரியபுராணம் 1270)

ஞாலம் உய்ய நாம் உய்ய
நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகை

(பெரியபுராணம் 499)

தென்தமிழ்ப் பயனாய் உள்ள திருத்தொண்டத்தொகை

(பெரியபுராணம்.48)

இதில் 60 தனியடியார்களும் 9 தொகையடியார்களும் குறிக்கப்பட்டுள்ளனர். பெரியபுராணத் தோற்றத்திற்கு இதுவே முதல் நூலாக அமைந்தது. இதில் தில்லை வாழ் அந்தணர் என்று தொடங்கி 11 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

## ஏழாம் திருமுறை

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ஏழாம் திருமுறைப் பாடல்கள் இலக்கிய எழிலும், கற்பனை வளமும், பக்திக் கனிவும் மிக்கன. இறைவன் ஒருவனே, போற்றிப் புகழத் தக்கவன் என்பதனை,



www.saivamonline.com

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே எந்தைப்
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலும் ஆம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே (7564)

என்று பாடுகிறார். குற்றம் செய்யினும் மன்னித்துச் சிவபெருமான் அருள்செய்வான் எனத் தாம்கொண்ட நம்பிக்கையை,

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானும்
கற்ற சூதன் நற்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லன் என்றிவர்கள்
குற்றஞ் செய்யினும் குணம் எனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே (7786)

என்ற பாடலாலும் சுந்தரர் பதிவு செய்கிறார்.

## அரிய தொடர்கள்

சைவப் பெருமக்கள் போற்றித் துதிக்கும் பல அரிய பாடல்களும், தொடர்களும் ஏழாந் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. ஒன்றிரண்டு கீழே தரப்பட்டுள்ளன.

நற்றவா உன்னை நான் மறக்கிலும்
சொல்லும்நா நமச்சி வாயவே (7712)

வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்



www.saivamonline.com

மற்றுநான் அறியேன் மறுமாற்றம் (7774)

அன்னம் வைகும் வயற்பழனத்து அணி
ஆரூ ரானை மறக்கலும் ஆமே (7827)

வாழ்வாவது மாயம்; இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக் கடல் (8016)

விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன்
விரும்பி ஆட்பட்டேன் (8189)

மண்ணுலகில் பிறந்து நும்மை
வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல்
தொண்டனேன் இன்று கண்டு ஒழிந்தேன் (8245)

இவ்வாறான அற்புதத் தொடர்களுடன் ஏழாம் திருமுறை நிறைவடைகிறது.

## மாணிக்கவாசகர்

பன்னிரு திருமுறைகளுள் எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது மாணிக்கவாசகரின் திருவாசகம். இவரே இயற்றியதாகக் கருதப்படும் திருச்சிற்றம்பலக் கோவையாரும் எட்டாம் திருமுறையாகக் கொள்ளப்பட்டு வருகிறது. மாணிக்கவாசகர் பாண்டியநாட்டில் திருவாதவூரில் ஆமாத்திய பிராமண குலத்தில், சம்புதபாதசிரயர், சிவஞானவதி என்னும் பெற்றோர்களுக்கு அருமகவாக அவதரித்தார். இயற்பெயர் திருவாதவூரர். பாண்டியன் அவையில் தென்னவன் பிரமராயன் என்ற பட்டம் வழங்கப் பெற்று முதல் அமைச்சராக விளங்கினார். மன்னன் அளித்த பொருளை இவர் குதிரை வாங்கப் பயன்கொள்ளாது, திருப்பெருந்துறை (ஆவுடையார்கோயில்) திருக்கோயில் திருப்பணிக்குச் செலவிட்டார். சிவபெருமான் குருவடிவம் காட்டி இவரைக் குருந்த மர நிழலில் ஆட்கொண்டான்.



www.saivamonline.com

அக்காலை இவர் பாடிய பனுவல்களே திருவாசகம். இறைவன் இவருக்கு மாணிக்கவாசகர் என்னும் திருநாமம் சூட்டினான். நரி பரியானது. வைகையில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இறைவன் பிரம்படி பட்டது, பௌத்தர்களோடு வாதிட்டது. தில்லைப் பொன்னம்பலத்தில் இறைவன் தாள் மலர்களில் கலந்தது என்பன இவரது வாழ்வியல் அற்புதங்களாகும். ஆனி மகநாளில் இவர் இறையடிகளில் கலந்தார். இவ்வுலகில் இவர் வாழ்ந்த காலம் 32 ஆண்டுகள் என்பர். இவர் காலம் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பிற்பட்டது என்பதே ஆய்வாளர் முடிவு. இவர் தேவார மூவருக்கும் முற்பட்டவர் என்றும் சிலர் கூறியுள்ளனர்.

## திருவாசகம்

திருவாசகம் 51 பகுதிகளையும் 649 பாடல்களையும் கொண்டுள்ளது. திருவாசகத்தில் 38 சிவத்தலங்கள் பாடப்பெற்றுள்ளன. முதற்கண் சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல் என்னும் நான்கு பெரும் பகுதிகள் அமைந்துள்ளன. அடுத்து வரும் திருச்சதகம் 100 பாடல்களைக் கொண்டுள்ளது. நீத்தல் விண்ணப்பம் 50 பாடல்கள் கொண்டது. திருவெம்பாவையில் 20 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திருவம்மானையும் 20 பாடல்களால் நடையிடுகிறது. திருப்பொற்சுண்ணம் முதல் திருவுந்தியார் வரை 6 பகுதிகளும் அவ்வாறே 20 பாடல்களால் நடையிடுகின்றன. எஞ்சிய பகுதிகள் பெரும்பாலும் 10 பாடல்கள் கொண்ட பதிகங்களாகவே அமைந்துள்ளன. திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்தும் உருகார் என்பது இதன் சிறப்புரைக்கும் பழமொழி.

> தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
> அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை



www.saivamonline.com

மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

(பழம் பாடல்)

என்ற வெண்பா, திருவாசகச் சிறப்புரைத்து வந்துள்ளது. மேலை நாட்டுக் கிறித்தவர்களும் இதன் சிறப்பில் நெஞ்சைப் பறிகொடுத்துள்ளனர். இதனை ஒரு அனுபவ நூல் என்பர். திருவாசகச் சிறப்பினைப் பின்வந்த சிவப்பிரகாச சுவாமிகள், வடலூர் இராமலிங்க வள்ளலார் முதலியோர் பெரிதும் போற்றிச் சிறப்பித்துள்ளனர். திருவாசகம் ஒரு சிறந்த பாராயண நூலாகத் திகழ்ந்து வருகிறது.

## அனுபவ வெளிப்பாடுகள்

திருவாசகத்தில், பக்தி அனுபவ வெளிப்பாட்டில் வந்த பல அரிய தொடர்கள் இடம் பெற்றுள்ளன.

*நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க! (சிவபுராணம்)*

*அவன் அருளாலே அவன்தாள் வணங்கி (சிவ-18)*

*புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*
*பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*
*கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்*
*வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்*
*செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்*
*எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் (சிவ-26-31)*

*சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்*
*செல்வர் சிவன் அடிக்கீழ் (சிவ-93-94)*

*அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்*
*அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி*
*ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்*



www.saivamonline.com

*நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன*
*(திருவண்டப்பகுதி 1-4)*

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*(போற்றித்திருவகவல் 164-65)*

இவையும், இவைபோல்வனவுமாகிய அரிய தொடர்கள் பலவற்றைத் திருவாசகத்தில் காணலாம்.

## அருட் பனுவல்கள்

திருவாசகத்தில் ஞான அனுபவ வெளிப்பாடாக அமைந்த, உள்ளுருக்கும் அருட்பனுவல்கள் பல உள்ளன. ஒன்றிரண்டைக் காணலாம்.

யானே பொய் என் நெஞ்சும் பொய்
என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந்து உறுமாறே (திருச்சதகம் - 90)

என்ற பாடலில் தன்னிலை இரக்கம் நிறைந்துள்ளது.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால்நான் முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்
(திருவெம்பாவை-20)



www.saivamonline.com

என்ற பாடலில், படைத்தல் முதலிய இறைவனின் ஐந்தொழில்களும் ஒருசேரப் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாணிக்கவாசகரின் பக்தி வைராக்கியத்தை,

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையேஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே

என்ற அரிய பாடல் அளவிட்டுக் காட்டுகிறது.

## திருச்சிற்றம்பலக் கோவையார்

எட்டாந் திருமுறையுள் இடம் பெற்றுள்ள திருச்சிற்றம்பலக் கோவையார், 400 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் நடையிடுகிறது. அகப்பொருள் துறைகள் பலவற்றையும், அவை நிகழும் முறையில் நிரல்படக் கோத்துச் செய்யப்படும், அகப்பொருள் நூல் வகையைச் சார்ந்தது கோவை என்பது. திருச்சிற்றம்பலக் கோவையாரே இவ்வகையில் முதல் நூல் என்பர். தில்லைக் கூத்தப் பெருமானைப் பாடல்தோறும், சார்த்து வகையில் புகழ்ந்துரைக்கும் போக்கில் இந்நூல் நடையிடுகிறது. பேராசிரியர் என்பார் எழுதிய அரிய உரை ஒன்றும் இந்நூலுக்கு உள்ளது. தில்லைச் சிற்றம்பலவனின் அருளிப்பாடுகள் பலவும், மிக்க நயத்துடன் இந்நூலுள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அணியும் அமிழ்தும் ஆவியும் ஆயவன்
தில்லைச் சிந்தாமணி

(திருக்கோவையார்-5)



www.saivamonline.com

உணர்ந்தார்க்கு உணர்வரியோன் தில்லைச்
சிற்றம்பலத்து ஒருத்தன் (திருக். 9)

பொருளாய் எனைப் புகுந்து ஆண்டு
புரந்தரன் மால் அயன்பால்
இருளாய் இருக்கும் ஒளி (திருக்.73)

அருந்தும் விடம் அணியாம் மணிகண்டன்
மற்று அண்டர்க்கு எல்லாம்
மருந்தும் அமிர்தமும் ஆகும் முன்னோன்
(திருக்.272)

மூப்பான் இளையவன் முன்னவன் பின்னவன்
முப்புரங்கள்
வீப்பான் வியன்தில்லையான் அருளால்விரி
நீர் உலகம்
காப்பான் (திருக்.312)

நாய்வயின் உள்ள குணமும் இல்லேனை நல்
தொண்டு கொண்ட
தீவயின் மேனியன் (திருக். 343)

எனவரும் திருக்கோவையார் தொடர்கள் தில்லைச் சிற்றம்பலவன் கருணைக்கும், மாணிக்கவாசகரின் பக்தி வைராக்கியத்திற்கும் சான்று கூறி நிற்கின்றன.

இப்பகுதியில் அரிய தேவாரத்திருவாசகத் தொடர்களும், பெரிதும் போற்றப்படும் அருள் பனுவல்களில் சிலவும், எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் பதிப்புகள், உரைகள், இவை பற்றி எழுந்த ஆய்வுகள், மொழி பெயர்ப்புகள் முதலியன பற்றி எல்லாம் இங்கே விரித்துரைக்க இயலவில்லை. இவற்றை எல்லாம் அறிந்துகொள்ள விரும்புவோர், தேவாரத் திருவாசகங்கள் குறித்து வெளிவந்துள்ள ஆய்வு நூல்களின் உதவியை நாடுவது நலம்



www.saivamonline.com

பயக்கும். விரிவஞ்சிச் சுருங்கிய முறையிலேயே, இன்றியமையாத சில குறிப்புகள் மட்டுமே இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன.

## திருமுறைகள் : ஒன்பது முதல் பன்னிரண்டு வரை

எஞ்சிய திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்ற இருநூல்களின் தொகுப்பாகும். திருவிசைப்பாவை, திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் ஈறாக ஒன்பது பேர் பாடியுள்ளனர். ஒரே பதிகமான திருப்பல்லாண்டு, சேந்தனார் என்பவரால் பாடப்பட்டது. பத்தாம் திருமுறையாகத் திருமந்திரம் தொகுக்கப்பட்டுள்ளது. அதன் ஆசிரியர் திருமூலர் என்பவர். பதினொராம் திருமுறை பாடிய ஆசிரியர் பன்னிருவர். இந்நூலுள் திருவாலவாயுடையார் பாடிய திருமுகப்பாசுரம் முதல், நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருநாவுக்கரசர் திருஏகாதச மாலை உள்பட, நாற்பது நூல்கள் இடம் பெற்றுள்ளன. பன்னிரண்டாம் திருமுறை திருத்தொண்டர் புராணம். இதனைப் பெரிய புராணம் என்று கூறுதலே பெரிதும் வழக்கத்தில் உள்ளது. இதனைப் பாடியவர் சேக்கிழார்.

## ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறையாகக் கொள்ளப்படுகிறது. திருவிசைப்பாவை திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி-நம்பி,காடநம்பி,கண்டராதித்தர்,வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் ஒன்பதின்மர் பாடியுள்ளனர். திருப்பல்லாண்டு சேந்தனாரால் பாடப்பட்டுள்ளது. ஒன்பதாம் திருமுறையுள், திருவிசைப்பா 28 பதிகங்களையும், திருப்பல்லாண்டு ஒரு பதிகத்தையும்



www.saivamonline.com

கொண்டுள்ளது. இந்நூலுள் 14 சிவத்தலங்கள் பாடப்பட்டுள்ளன. 6 பண்களில் இவ்விசைப் பாடல்கள் அமைந்துள்ளன. தேவாரப் பதிகங்களுள் காணப்படாத சாளரபாணி என்ற பண் திருவிசைப்பாவில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இருநூல்களும் 301 பாடல்களைக் கொண்டுள்ளன. தேவாரப் பாடல் பெறாத, கங்கை கொண்ட சோழபுரம், திருக்களந்தை ஆதித்தேச்சுரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சுரம், திருவிடைக்கழி ஆகிய எட்டுத் தலங்கள் திருவிசைப்பா ஆசிரியர்களால் பாடப்பெற்றுள்ளன.

## திருவிசைப்பா

திருவிசைப்பாவில் திருமாளிகைத் தேவர் பாடிய பதிகங்கள் நான்கு. இவை அனைத்தும் கோயில் என்று சிறப்பித்துக் கூறப்படும் தில்லைக்கு உரியன. சேந்தனார் பாடிய பதிகங்கள் மூன்று. திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகிய மூன்று தலத்திற்கு இவரது திருவிசைப்பா அமைந்துள்ளது. கருவூர்த்தேவர் பாடிய பதிகங்கள் பத்து, இவை கோயில், திருக்களந்தை, திருக்கீழ்க் கோட்டூர், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோழபுரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை, திருவிடைமருதூர் முதலிய பத்துத் தலங்களுக்கும், தலத்துக்கு ஒன்றாக அமைந்துள்ளன. பூந்துருத்தி நம்பி காட நம்பி திருவாரூர், கோயில் எனும் இருதலங்களையும் ஒவ்வோர் பதிகத்தால் பாடிச் சிறப்பித்துள்ளார். கண்டராதித்தரும், வேணாட்டடிகளும் கோயில் மீது தலா ஒவ்வோர் பதிகம் பாடியுள்ளனர். திருவாலியமுதனார் கோயில் குறித்து நான்கு பதிகங்கள் பாடித் தந்துள்ளார். கோயில் குறித்துப் புருடோத்தமநம்பி இரண்டு பதிகங்களும், சேதிராயர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர்.



www.saivamonline.com

சேந்தனார் கோயில் என்னும் தில்லைக்கு ஒரே பதிகமாகத் திருப்பல்லாண்டு பாடியுள்ளார்.

## திருவிசைப்பாவில் முருகன்

ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பாப் பதிகங்கள் பலவும், தேவாரப் பனுவல்களைப் போலவே சிவன் பெருமை பேசி நின்றன. இத்திருமுறையுள் புதுவரவாய், சேந்தனார் பாடிய திருவிடைக்கழிப் பதிகம், சிவகுமாரனாகிய முருகன் மீது பாடப்பட்டுள்ளது. பஞ்சமம் என்ற பண்ணில் அமைந்த இப்பதிகத்தில் பதினொரு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஒன்பதாம் திருமுறையில் இப்பதிகம் இணைக்கப்பெற்றமை, பின் வந்த பதினொராம் திருமுறையுள், விநாயகர் மற்றும் சிவன் அடியார்கள் மீது பாடப்பட்ட பாடல்களும், பனுவல்களும் இணைக்கப் படுவதற்கு வழிகோலியதாகக் கொள்ளலாம். செவிலி கூற்றாக, அந்தாதித் தொடை பெற்று அமைந்துள்ள இப்பதிகத்தில், முருகன் சிறப்புகள் பலவாறு விரித்துரைக்கப்பட்டுள்ளன.

மாலுலா மனம்தந்து என்கையில் சங்கம்
வௌவினான் மலைமகள் மதலை
சேல்உலாம் தேவர் குலம் முழுது ஆளும்
குமரவேள் வள்ளி தன் மணாளன்
சேல்உலாம் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழல்கீழ் நின்ற
வேல்உலாம் தடக்கை வேந்தன் என்சேந்தன்
என்னும் என் மெல்லியல் இவளே.

முருகன் மீது காதல் கொண்ட இளமகள் ஒருத்தியின், காதல் மீதூறிய கலக்க மொழிகளைச் செவிலி எடுத்துரைப்பதாக இப்பதிகம் அமைந்துள்ளது.



www.saivamonline.com

## திருப்பல்லாண்டு

ஒன்பதாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள திருப்பல்லாண்டு 13 பாடல்களைக் கொண்டது. பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்தும் வாழ்த்தினைப் பல்லாண்டு என்று, முதற்குறிப்பால் வழங்கியுள்ளனர். வைணவத்தில் பல்லாண்டு கூறும் பாடல்கள் உண்டு. அவற்றைப் பின்பற்றிச் சைவத்திலும் பல்லாண்டு பாடும் வழக்கம் வந்திருக்கக் கூடும். திருப்பல்லாண்டு உரையாசிரியர்,

"இறைவன் என்றும் உள்ளவன் ஆதலின், வாழ்த்துவார் வாழ்த்தும் வாழ்த்தினானாதல், வைவார் வையும் வைவினானாதல் அவனுக்கு வருவது ஒன்று இல்லையாயினும், வெகுளியுற்றார்க்கு அவ்வெகுளி காரணமாக, அவனை வைதல் இயல்பாதல் போல, அன்புற்றார்க்கும் அவ்வன்பு காரணமாக, அவனை வாழ்த்தலும் இயல்பாதலின், அடைக்கும் தாழ் இல்லாத அவ்வன்பின் செயல், அவர் மாட்டு இயல்பானே வெளிப்படுவதாம்."

என இப்பதிகம் தோற்றம் கொண்டதற்கான காரணத்தை ஒருவாறு ஆராய்ந்து உரைத்துள்ளார்.

## பல்லாண்டு -அழகிய தொடர்கள்

பல்லாண்டுப் பாடல்கள் யாவும் நிறைவில், பல்லாண்டு கூறுதுமே என ஒரேமாதிரியாக அமைந்துள்ளன. தில்லை அம்பலவன் சிறப்புரைத்தலே அதிகமாகப் பதிகத்துள் நிறைந்துள்ளது. சிவன்,

பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தன்

என்றும்,

அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்

என்றும்

சிற்றம்பலமே இடமாகப் பாலித்து நட்டம்
பயில வல்லான்



www.saivamonline.com

என்றும்

பாதகத்துக்குப் பரிசு வைத்தான்

என்றும் வரும் அழகிய தொடர்கள் திருப்பல்லாண்டில் இடம் பெற்றுள்ளன.

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய் அடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசர்க்குஆட்
செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

என்ற அழகிய பாடலில், இறைவனாகிய சிவன், என்றும் நிலை பேறுடையவன் என்பது தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

## திருமந்திரம்

திருமூலதேவ நாயனாரின் திருமந்திரமாலை, சைவத் திருமுறைகளுள் பத்தாவதாக இடம் பெற்றுள்ளது. தமிழ்மொழியில், பெருஞ்சிறப்புக்கு உரிய முதன்மையான நூல்களைத் தொகுத்து உரைக்கும் ஒரு பழம்பாடல் உள்ளது.

தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் கோவைத்
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்.

என்ற பாடலில் திருமந்திரமும் இணைக்கப்பெற்றிருப்பது, இதன் சிறப்பிற்குச் சான்று கூறி நிற்கிறது. சைவ ஆகமங்களின் சாரமாகத் திகழும் இந்நூலை, தமிழில் எழுந்த, சைவ சமயஞ்சார்ந்த, ஒரு கலைக்களஞ்சியம் என்றே கூறலாம். காரணாகமம், காமிகம், வீரம், சித்தம், வாதுளம், வியாமளம்,



www.saivamonline.com

காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களின் சாரமாக இந்நூலில் ஒன்பது தந்திரங்கள் அமைந்துள்ளன. தந்திரம் என்பது நூலின் உள்பிரிவினைக் குறிப்பது.

தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே

என்ற சிறப்புப் பாயிரப் பகுதி இதனை உறுதி செய்கிறது. இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டுள்ளது.

## விநாயகர் காப்பு

திருமந்திரத்தின், முதல் தந்திரம் முதல் ஒன்பதாவது தந்திரம் வரையிலான ஒவ்வோர் தந்திரமும், ஒவ்வோர் சமய உண்மையை நுட்பமுற எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன. முன்னதாக அமைந்துள்ள கடவுள் வாழ்த்தில், வேத ஆகமங்களின் சிறப்பு,திருமூலர் வரலாறு முதலியன விரித்துரைக்கப் பெற்றுள்ளன. இந்நூல் விநாயகர் காப்பு ஒன்றுடன் தொடங்குகிறது.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்று கின்றேனே

என்பது திருமந்திரத்தின் காப்புச் செய்யுள். கடவுள் வாழ்த்துப் பகுதியில், சிவபெருமானின் பெருமை பேசும் 50 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள் அறிவார் இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே



www.saivamonline.com

சிவனின் மேலான கருணைத் திறத்தைச் சுட்டிக்காட்டி, எனினும் மக்கள், அவன் கருணையை முழுவதும் உணர்ந்து, வழிபட்டு வாழ்வு பெற்றிலர் என்ற திருமூலரின் மனவருத்தம் இப்பாடலில் பதிவாகியுள்ளது.

## வேத ஆகமச் சிறப்பு

இந்தியத் தத்துவச் சிந்தனைகளின் மூலநூல்களாகவும், முதல் நூல்களாகவும் திகழ்வன வேதங்கள். இவற்றின் சிறப்புரைக்கும் பகுதி ஒன்று பாயிரத்துள் அமைந்துள்ளது.

வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தின்
ஓதத் தகும் அறம் எல்லாம் உள தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே

என்பதில், அறங்களின் சாரமாக வேதங்கள் அமைந்துள்ளன என்பதை ஆசிரியர் இனங்காட்டுகின்றார். ஆகமங்களின் சிறப்பும் திருமந்திரத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 10 பாடல்களில் ஆகமம் பற்றிய பல செய்திகள் தொகுத்து உரைக்கப்பட்டுள்ளன. ஆகமம் இறைவன் அருளால் பிறந்தது என்பதும், அவற்றின் தொகை 28 என்பதும் ஒரு பாடலில் குறிக்கப்பட்டுள்ளது.

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்து அறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே

ஆகமங்களில் தமிழில் எழுந்த ஆகமங்களும் உண்டு என்பதை, 'ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக் காரிகையார்க்குக் கருணை செய்தானே' என்ற தொடரால் அறிய முடிகிறது.

## திருமூலர் வரலாறு

திருமூலர் வரலாறு குறித்தும் பாயிரப் பகுதியில்



www.saivamonline.com

பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திருமூலர், பெரியபுராண நாயன்மார் வரிசையிலும் இடம் பெற்றுள்ளார். இவர் வரலாற்றைப் பெரியபுராணமும் எடுத்துரைக்கிறது. வடநாட்டிலிருந்து தென்னாடு வந்த முனிவர் ஒருவர், ஒரு மாடு மேய்க்கும் இளைஞன் உடலில், கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, மூலன் எனப் பெயர் பெற்றார். திருவாவடுதுறையில் யோகத்தில் பலகாலம் இருந்து, இத்திருமந்திரமாலையை உலகுக்கு வழங்கினார்.

சீருடையான் சிவன் ஆவடு தண்துறை
சீருடையாள் பதம் சேர்ந்திருந் தேனே

எனவும்,

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்

எனவும் வரும் பகுதிகள் வரலாற்றுச் சான்றுகளாக உள்ளன. இப்பகுதியில் திருமூலரே,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

என்று குறிப்பிட்டுள்ளது கருதத்தக்கது. தமிழில் ஆகம சாரங்களைத் தொகுத்தளிப்பதே அவர் வருகையின் நோக்கம் என்பது உறுதியாகிறது.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்

என்ற அரிய தொடர் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

## தந்திரங்கள்- உள்ளீட்டுச் செய்திகள்

திருமந்திரத்தின் முதல் தந்திரத்துள், உபதேசம், யாக்கை நிலையாமை, கொல்லாமை, கல்வி, கள்ளுண்ணாமை முதலிய நல்லறங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.



www.saivamonline.com

இரண்டாம் தந்திரத்துள், சிவனின் எட்டுவகை வீரச்செயல்கள், ஐந்தொழில்கள், சிவனையும் குருவையும் நிந்திப்பதால் வரும் துன்பங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் தந்திரத்தில், அரிய யோகக் கலைக் கூறுகளும், அட்டமாசித்திகளும் விளக்கப்பட்டுள்ளன.

நான்காம் தந்திரத்துள், மந்திரத்தன்மை மிக்க திரு அம்பலச் சக்கரம், நவகுண்டம், வயிரவி மந்திரம் முதலியன விளக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் தந்திரத்துள், இறைவனை சென்று அடைதற்கு உரிய நால் நெறிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவும் சத்திநிபாதமும் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

ஆறாம் தந்திரத்துள், குருதரிசனப் பயன், திருநீற்றின் சிறப்பு, துறவு முதலிய நிலை குறித்து விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

ஏழாம் தந்திரம் ஆறு ஆதாரங்கள், சிவபூசை, குரு பூசை, சமாதி அமைத்து வழிபடும் முறை, உயிர் இலக்கணம் என்பன குறித்த செய்திகளின் தொகுப்பாக அமைந்துள்ளது.

எட்டாம் தந்திரம், பத்தி நிலை, முத்தி நிலைகள் குறித்து விளக்கங்கள் தருகிறது.

ஒன்பதாம் தந்திரத்தில், எளிதில் பொருள் விளங்கிக்கொள்ள இயலாத, நுண்பொருள்களை விளக்கும் சூனிய சம்பாஷணை விளக்கப்பட்டுள்ளது.

## திருமந்திரம் - அரிய தொடர்கள்

திருமந்திரம் சைவ சமயத்திற்கு மட்டும் உரிய ஒரு சமய நூலாக அமையாது, உலகத்தவர்களுக்கெல்லாம் அறத்தையும், ஆன்ம ஈடேற்றத்தையும், மருத்துவக்



www.saivamonline.com

கூறுகளையும் எடுத்துரைக்கும் பொது நூலாக அமைந்துள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அரிய பாடல் பகுதிகள், திருமந்திரத்தின் சிறப்புக்குக் கட்டியம் கூறி நிற்பன.

சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
ஆர்க்கும் இடுமின்! அவர் இவர் என்னன்மின்

ஈசன் அடியார் இதயம் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்

பெரியார் உடன்கூடல் பேரின்ப மாமே
உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே
குருவே சிவம் எனக் கூறினன் நந்தி
மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்

இவை போன்ற நூற்றுக்கணக்கான அரிய தொடர்கள் திருமந்திரத்துள் இடம் பெற்றுள்ளன.

## திருமந்திரத்தில் அன்பு

திருமந்திரம் ஆகமத்தின் சாரமாக அமைந்திருந்தாலும், அனைவரும் உணரும் எளிமையும், இனிமையும் உடைய பாடல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அன்பே சிவம் என்ற தொடரை, பலரும் அறிவர். மனிதர்கள், ஏனைய மனிதர்கள்பால் செலுத்தும் அன்பில்தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்தில் தோன்றிய, கடவுள் சார்புடைய மதங்களும், கடவுள் மறுப்புச் சமயங்களும்கூட அன்பினைப் பெரிதும் போற்றியே உரைக்கின்றன. திருவள்ளுவர் முதலிய அறநூலாசிரியர்களும் அன்பின் சிறப்பையும், இன்றியமையாமையையும் எடுத்துரை உள்ளனர். சைவர்களின் இறைவன் சிவன். அவன் யார்? அவன் இயல்பு எத்தகையது என்ற வினாக்களுக்குத் திருமூலர்



www.saivamonline.com

தரும் விடை ஆழ்ந்த பொருட் சிறப்புடையது. அன்புதான் எங்கள் சிவன். சிவன் வேறு அன்பு வேறு என்பார் அறியாமைமிக்கவர்கள். இரண்டும் ஒன்றே என்று உணரும் உணர்வில் இறைமைப்பேறு வாய்க்கும்.

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

என்பது அன்பின் சிறப்புரைக்கும் அரிய பாடல்.

## மரமும் யானையும்

உலகம் வேறு, இறைவன் வேறானவன் என்று கருதும் கருத்து, சமய நம்பிக்கை உடையவர்களிடமும் உள்ளது. குழந்தை, மரத்தால் செய்யப்பட்ட யானைப் பொம்மையைக் கண்டு யானை யானை என்று அஞ்சித் தாயிடம் தஞ்சம் அடைகிறது. தாயோ, இது யானை இல்லை, மரம் என்று கூறிக் குழந்தையின் அச்சம் நீக்குகிறாள். என்றால், குழந்தை கண்டது யானையா மரமா என்ற ஐயம் எழுகிறது. யானையாகக் கண்ட குழந்தைக்கு மரம் என்பது புலப்படவில்லை. மரம் என்ற தெளிவு பெற்ற தாய்க்கு யானை புலப்படவில்லை. இவற்றைப் போல் உலகத்தையும், உலகப் பொருள்களையும் இறைவனாகவே காண்பார்க்கு அவை புலப்படுவதில்லை. உலகமாகவே காண்பார்க்கு இறைமை புலனாவதில்லை. இவ்வழகிய உண்மையைத் திருமந்திரம் மிக அழகிய கவிதை ஒன்றில் வைத்து விளக்குகிறது.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதல் பூதம்



www.saivamonline.com

எளிய இனிய எடுத்துக்காட்டுக்களால் அமைந்துள்ள இத்தகு கவிதைகள் திருமந்திரத்தில் நிறைவாக இடம் பெற்றுள்ளன.

## மனித நேயப் பதிவு

சைவம், மனித நேயத்தை வற்புறுத்தும் ஓர் அன்பு நெறி. சிற்றுயிர்கள் பாலும் கருணை காட்ட வேண்டும் என்று அது வற்புறுத்துகின்றது. உலகத்தையும், நுகர் பொருள்களையும், இறைவன், உயிர்கள் பெற்று இன்புறுவதற்கே படைத்தளித்தான். உயிர்களிடமிருந்து இறைவன் அன்பு ஒன்றைத் தவிர, வேறு எதையும் பெற விரும்புவதில்லை. ஆனால் சமயவாதிகள் பலரும், சடங்கு நெறியில் பற்றுக்கொண்டு நின்று, மனிதனின் பசிக்கு உணவிட விரும்பாது, இறைவனுக்குப் படையலிட்டு மகிழ்கின்றனர். இறைவன் மனிதன் அளிக்கும் உணவையும், படையலையும் உண்டு மகிழ்கின்றானா என்றால் இல்லை. இறைவன் கவனத்திலும், கணக்கிலும் அவனுக்குப் படைக்கப்படும் படையல் இடம்பெறுவதில்லை. அவன் கணக்கில் இடம் பெற விரும்பினால், பசித்திடுவோருக்கு உணவு அளியுங்கள். அதுவே, அவனைச் சென்றடையும் என்று அரிய பெரு நெறி காட்டுகிறார் திருமூலர்.

> படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
> நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
> நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
> படமாடக் கோயில் பகவர்க்கு அது ஆமே

நடமாடக் கோயில் நம்பர் என்பது, மனித உயிர்களைக் குறித்து வந்தது.

## வாழ்வியல் உண்மைகள்

இறைவனை சென்று அடைதற்கு உரிய எளிய வழி,



www.saivamonline.com

குருவை வழிபடுதலால் கிட்டும். பிறன்மனை நோக்காத பேராண்மையை ஆடவர் பெறல் வேண்டும். காக்கைத் தன் இனத்தைக் கூவி அழைத்துக் கலந்து உண்பது போல், சக மனிதர்களோடு கலந்து உண்ணல் வேண்டத்தக்கது. கற்றவர்களுக்கு மட்டுமே பேரின்பம் வாய்க்கும். கேள்விச் செல்வமே மனிதர்களுக்கு உற்ற துணை. கழிகாமமும் கள்ளுண்டலும் கீழோர் என்று அடையாளம் காட்டும். விரும்பியவாறு ஆண் அல்லது பெண் குழந்தை பெற்றுக்கொள்வதற்குரிய மூச்சுப்பயிற்சி முறை, குழந்தைகள் குருடாய், ஊமையாய், முடமாய்ப் பிறப்பதற்குரிய காரண விளக்கம். திருக்கோயில் வழிபாட்டின் இன்றியமையாமை முதலாய பல அரிய செய்திகளை வழங்கும் களஞ்சியமாகத் திருமந்திரம் அமைந்துள்ளது.

## பதினோராம் திருமுறை

பதினோராம் திருமுறை, பன்னிரு ஆசிரியர்களால் பாடப்பெற்ற நாற்பது சிற்றிலக்கியங்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. இதில், தேவார ஆசிரியர்கள் காலத்துக்கு முற்பட்ட நூல்களும் இணைக்கப்பட்டுள்ளன. ஒன்பதாம் திருமுறையில், முருகனைப் பற்றிய பதிகம் இணைக்கப்பட்டிருப்பதைப் போல், விநாயகர் வழிபாட்டு நூல்கள் சில, இத்திருமுறையில் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், சைவ அடியவர்களாகிய கண்ணப்பர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியோர் மீது பாடப்பட்ட பதிகங்களும், சிற்றிலக்கியங்களும், இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. திருமுறைகள் பதினொன்றாகத் தொகுக்கப்பட்ட பின்னர், அடியார் சிறப்புரைக்கும் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகத் திருமுறைகளுள் இணைக்கப்படுவதற்கு, அடியவர் இலக்கியங்களின் இணைப்பே வாயிலாக அமைந்திருக்க வேண்டும்.



www.saivamonline.com

## திருமுகப் பாசுரம்

பதினொராம் திருமுறையில், முதலாவதாக இடம் பெற்றிருப்பது, 'மதிமலி புரிசை மாடக் கூடல்' என்று தொடங்கும் ஒரு சீட்டுக்கவி பாடலாகும். இதனைத் திருமுகப் பாசுரம் என்று கூறுதல் வழக்கு. மதுரையில் வாழ்ந்த, பாணபத்திரன் என்பவனை ஆதரிக்குமாறு சிவபெருமான், சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதிக்கொடுத்த பரிந்துரைக் கடிதமாகவே இது அமைந்துள்ளது. இதனைப் இப்பாடல் நிறைவில் இடம் பெற்றுள்ள,

பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன், தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே

என்னும் நான்கு வரிகள் உறுதி செய்கின்றன. திருவாலவாயுடையார், தம்மைப் பற்றிக் கூறிக் கொள்ளும் அறிமுகப் பகுதி அழகானது.

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான்

என்பது அவ்வறிமுகப் பகுதி. இவ்வரலாற்று உண்மையைச் சேக்கிழாரும் தம் பெரியபுராணத்துள் உறுதி செய்கிறார்.

அதிர்கழல் உதியர் வேந்தர்க்கு
அருள்செய்த பெருமை யாலே
எதிரில் செல்வத்துக்கு ஏற்ற
இருநிதி கொடுக்க என்று
மதிமலி புரிசை என்னும்
வாசகம் வரைந்த வாய்மைக்
கதிரொளி விரிந்த தோட்டுத்



www.saivamonline.com

திருமுகம் கொடுத்தார் காண.

## காரைக்கால் அம்மையார்

பதினொராம் திருமுறையுள், இரண்டாவதாக இடம்பெற்றுள்ள பனுவல்கள் காரைக்கால் அம்மையார் அருளியன. இவரது நான்கு பனுவல்கள் இத்தொகுப்பில் உள்ளன. 1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், 2. மூத்த திருப்பதிகம், 3. திருவிரட்டை மணிமாலை, 4. அற்புதத் திருவந்தாதி என்பன அவை. அம்மையாரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், தம் திருத்தொண்டத் தொகையுள், பேயார் என்று குறித்துள்ளார். இவர் அருள் வரலாறு பெரியபுராணத்துள் விரித்துரைக்கப்பட்டுள்ளது. சிவபெருமானால், அம்மையே என்று அழைக்கப்பெற்ற பெருமைமிக்கவர். யாது வேண்டும் என்று சிவன் வினவியபோது, அம்மையார் உரைத்த மறுமொழிகள் பெரிதும் சிறப்புடையன.

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது
அடியின்கீழ் இருக்க என்றார்

திருஞானசம்பந்தர் அம்மையார் வதிந்த மண்ணைக் காலால் மிதிக்கவும் அஞ்சியதாகப் பெரியபுராணம் கூறுகிறது.

## மூத்த திருப்பதிகங்கள்

காரைக்கால் அம்மையார் பனுவல்களில், வடதிருஆலங்காட்டு இறைவன் மேல் பாடப்பெற்ற கொங்கை திரங்கி எனத் தொடங்கும் நட்டபாடைப் பண் அமைந்த



www.saivamonline.com

பதிகமும், எட்டி இலவம் எனத் தொடங்கும் இந்தளப் பண் அமைந்த பதிகமும் மூத்த திருப்பதிகங்கள் எனப் போற்றப்படுகின்றன. சிவனைப் பத்துப் பாடல்கள் கொண்ட தொகுதியால் தேவார ஆசிரியர்கள் மூவரும் பாடினர். இவற்றைத் தேவாரப் பதிகங்கள் என்பர். இவற்றுக்குக் காலத்தால் முற்பட்டன காரைக்கால் அம்மையார் பதிகங்கள். எனவே, இவரது பாடல் தொகுதியை மூத்த திருப்பதிகங்கள் என்று குறித்துள்ளனர். சமயத்துறையில் பண் ஒன்றிய பாடல்களாகத் தோன்றியன இப்பதிகங்களேயாகும். கொங்கை திரங்கி என்று தொடங்கும் அம்மையாரின் பதிகத்தின் ஒன்பதாகவது பாடலில், சப்தஸ்வரங்கள் எனக் கூறப்படும் ஏழு ஓசைகளுக்கும் தமிழில் பெயர் சூட்டப்பட்டுள்ளது. துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி ஓசை பண் கழுமப் பாடி என்பது அப்பாடல் பகுதி.

## மணிமாலை - அந்தாதி

திரு இரட்டை மணிமாலை, கட்டளைக் கலித்துறையும் வெண்பாவும் அடுத்தடுத்து அமைய 20 செய்யுள்களால் அந்தாதித் தொடை அமையப் பாடப்படுவது. அம்மையாரின் திருவிரட்டை மணிமாலை, இவ்வகையில் அமைந்த முதல் நூலாகும். இதனை, ஆய்ந்த சீர் இரட்டை மாலை அந்தாதி என்று சேக்கிழார் குறிக்கிறார். கட்டளைக் கலித்துறை என்ற புதிய யாப்பும் இந்நூலிலேயே முதன் முதல் கையாளப்பட்டுள்ளது. அம்மையார், பேய் வடிவம் வேண்டிப் பெற்ற காலைப் பாடிய பனுவல் தொகுதியே, அற்புதத் திருவந்தாதி எனப்படுகிறது. இந்நூல் வெண்பா யாப்பில் அந்தாதித் தொடை அமைய 101 பாடல்களால் பாடப்பட்டுள்ளது. பக்திக் கனிவும், சிவனின் அளப்பரும் கருணையும் இந்நூலுள் பெரிதும் பேசப்பட்டுள்ளன. அம்மையாரின் பக்திச் சிறப்பை,



www.saivamonline.com

இடர்களையா ரேனும் எமக்குஇரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பு அறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பு அறாது என்நெஞ்சு அவர்க்கு

என்ற அரிய பாடல் எடுத்துக்காட்டுகின்றது. அம்மையாரின் வாழ்வும் வாக்கும் பின்வந்த நூலாசிரியர்களால் பலபடப் பாராட்டப்பட்டுள்ளன.

ஐயடிகள் காடவர் கோன் என்பவரால் பாடப்பபெற்ற சிறுநூல், க்ஷேத்திரத் திருவெண்பா என்பது. 24 வெண்பாக்களைக் கொண்டுள்ள இந்நூல், சிவத்தலம் ஒவ்வொன்றின் சிறப்பு உரைத்து நடையிடுகிறது. பலபாடல்கள் நிலையாமைக் குறிப்பு அமையப் பாடப்பட்டுள்ளன.

தொட்டுத் தடவித்துடிப் பொன்றும் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக்- கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழை மடநெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை

திருச்சிராப்பள்ளியை அடுத்த, தேவாரப்பாடல் பெற்ற திருநெடுங்களம் குறித்து இப்பாடல் எழுந்துள்ளது.

## சேரமான் பெருமாள் நாயனார்

பெரியபுராண அடியவர்களில் ஒருவரும், சேர மன்னரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நண்பருமான, சேரமான் பெருமாள் பாடிய மூன்று பனுவல்கள் அடுத்துப் பதினொராம் திருமுறையுள் தொகுக்கப்பட்டுள்ளன. அவை, 1. பொன் வண்ணத்து அந்தாதி, 2. திருவாரூர் மும்மணிக்கோவை 3. திருக்கயிலாய ஞான உலா என்பன. இவற்றுள் பொன்வண்ணத்து அந்தாதி தில்லையில்



www.saivamonline.com

பாடப்பெற்றது. கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்தது. 100 பாடல்களைக் கொண்டது. இந்நூலின் முதற்பாடல் பொன்வண்ணம் என்று தொடங்குவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. ஆசிரியம், வெண்பா, கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த பாடல்கள் அடுத்தடுத்துவர, 30 பாடல்களால் திருவாரூர் இறைவன் மீது பாடப்பட்ட முதல் நூல், திருவாரூர் மும்மணிக்கோவை என்பது. தமிழில் எழுந்த முதல் உலா இலக்கியம், திருக்கயிலாய ஞான உலா என்பது. அதுபற்றி இந்நூல் ஆதி உலா என்று போற்றப்பட்டது. இந்நூல் கயிலையில் சிவன் முன்பு அரங்கேற்றப்பட்டதாகச் சேக்கிழார் குறித்துள்ளார். இந்நூலில் திருக்குறளும் குறள் கருத்துக்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு என்னும் சொல்லாலே
அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள்

என்ற பகுதி நோக்கத்தக்கது.

## நக்கீர தேவநாயனார்

நக்கீர தேவநாயனார் என்பவர் பாடிய 9 சிறு நூல்கள் அடுத்து இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. 1. கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி, 2. திரு ஈங்கோய் மலை எழுபது, 3. திருவெழுகூற்றிருக்கை, 4. பெருந்தேவபாணி , 5. கோபப் பிரசாதம், 6. காரெட்டு, 7. போற்றித் திருக்கலிவெண்பா, 8. திருமுருகாற்றுப்படை, 9. திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்பன அவை. இவரைச் சங்க கால நக்கீரர் என்றும், பின்வந்த வேறு ஒருவர் என்றும் ஆராய்ச்சியாளர் மாறுபட்டு உரைக்கின்றனர். சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படை இத்தொகுதியுள் இடம்பெற்றுள்ளது. இந்நூல் பற்றிய செய்திகள் முன்னரே உரைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் திருக்கண்ணப்பதேவர் திருமறம் 158 அடிகளை



www.saivamonline.com

உடையது.

நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப
அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப

என்ற அழகிய வரலாற்று வரிகள், இந்நூலுள்ளும் இடம் பெற்றுள்ளன. ஏனைய நூல்கள் சிவன் பெருமை பேசும் சிற்றிலக்கிய வகையில் அமைந்தன. அடுத்துக் கல்லாடர் என்பவரால் பாடப்பெற்ற 38 வரிகளை உடைய திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்ற அதே பெயரை உடைய சிற்றிலக்கியம் ஒன்றும் இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ளது.

## மூத்த நாயனார்

கபிலதேவர் என்பவர் பாடிய, 1. மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, 2. சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, 3. சிவபெருமான் திருவந்தாதி என்ற மூன்று நூல்கள், பதினொராந் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன. திருமுறைகளுள் இடம் பெற்றுள்ள விநாயகர் குறித்த முதற் சிற்றிலக்கியம், மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை.

திருஆக்கும் செய்கருமம் கை கூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

என்ற விநாயகர் வணக்கப்பாடல், சைவப் பெருமக்களுக்கு நன்கு அறிமுகமான ஒன்று. இவ்வாறே பரணர் என்பவரால் 101 பாடல்களில் பாடப்பெற்ற சிவபெருமான் திருவந்தாதி என்ற நூலும், இத்தொகுதியில் இணைக்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்து இளம் பெருமானடிகள் பாடிய சிவபெருமான் திருமும்மணிக்கோவை என்ற நூலும், அதிராவடிகள் பாடிய மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையும்



www.saivamonline.com

இத்தொகுப்பில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன. பிள்ளையார் என்ற சொல் ஒருகாலத்தில் முருகனைக் குறித்து வழங்கப்பட்டது. எனவே, விநாயகர், மூத்த பிள்ளையார் என்று அழைக்கப்பட்டுள்ளார் என்று அறிய முடிகிறது.

## பட்டினத்தடிகள்

அடுத்து, பட்டினத்தடிகள் பாடிய 5 நூல்கள் இத்திருமுறையுள் இணைக்கப்பட்டுள்ளன. அவை.1. கோயில் நான்மணிமாலை, 2.திருக்கழுமல மும்மணிக் கோவை, 3. திருவேகம்பமுடையார் திருவந்தாதி, 5.திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பன. இவற்றுள் கழுமலம் என்பது சீகாழித் தலத்தைக் குறிப்பது. உமையம்மை திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் அளித்தமையும், அவர் தோடுடைய செவியன் என்று தொடங்கித் தேவாரப் பாடல்கள் பாடிய திறத்தையும் இந்நூல் அழகுற எடுத்துரைக்கிறது. பட்டினத்தார் பாடியனவாகத் தனிப்பாடல்கள் சிலவும் உள்ளன. சித்தர் பாடல்கள் தொகுப்பிலும் பட்டினத்தார் பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன. இவர் நூல்களில் இறைவன் அருளிப்பாடும், தமிழர் பண்பாடும் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

## நம்பியாண்டார் நம்பிகள்

பதினொரு திருமுறைகளையும் தொகுத்து வழங்கிய நம்பியாண்டார் நம்பிகள் பாடிய 10 சிறு நூல்கள் இத்தொகுப்பின் நிறைவில் இடம் பெற்றுள்ளன. இவரது நூல்களுள் ஒன்று விநாயகர் மீதும், ஒன்று சிவன் மீதும், ஒன்று திருத்தொண்டத்தொகையின் விரிவாகவும், ஆறு நூல்கள் திருஞானசம்பந்தர் மீதும், நாற்பதாவது நூல் திருநாவுக்கரசர் மீதும் பாடப்பெற்றுள்ளன. கீழே தரப்பெற்றுள்ள பட்டியல், அவர் பாடிய நூல்களின் பெயர்களை விளக்கும் நோக்கில் அமைகிறது.



www.saivamonline.com

1. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
2. கோயில் திருப்பண்ணியார் விருத்தம்
3. திருத்தொண்டர் திருவந்தாதி
4. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி
5. ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்
6. ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை
7. ஆளுடையபிள்ளையார் திருவுலா மாலை
8. ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம்
9. ஆளுடையபிள்ளையார் திருத்தொகை
10. திருநாவுக்கரசு நாயனார் திருஏகாதசமாலை

## நம்பி-நூல்கள்

நம்பியாண்டார் நம்பிகள், திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையார் அருள்பெற்றவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சுருக்கமாகத் தம் திருத்தொண்டத் தொகையுள் அடையாளம் காட்டிய சிவனடியார்கள் வரலாற்றை, ஓரளவு இனம் கண்டு, தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் விரித்துரைத்தவர். தேவார மூவர் மீதும் அளவற்ற அன்பும், பக்தியும் கொண்டவர். பெரியபுராண உருவாக்கத்திற்கு இவர் நூல்கள் பெருந்துணையாக நின்றன. விநாயகப்பெருமானை,

என்னை நினைந்து அடிமை கொண்டு என் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்

என இவர் போற்றுகின்றார். திருச்சண்பை விருத்தத்துள்,

ஆறு தேறும் சடையான் அருள்மேவே
வீறு தேறும் தமிழால் வழிகண்டவன்

எனவும், ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக் கோவையுள்,



www.saivamonline.com

என்றும் அடியவர் உள்ளத்து இருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்து
ஒன்றும் புலவர்கள் யாப்புக்கு உரியன ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவசிகாமணிப் பொன்னடியே

எனவும் இவர் திருஞானசம்பந்தரைப் பெரிதும் போற்றி மகிழ்கிறவர், இவ்வாறான 40 பனுவல்களின் தொகுப்பாக பதினொராம் திருமுறை நிறைகிறது.

## பன்னிரண்டாம் திருமுறை

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில், நிறைவாக அமைந்திருப்பது பெரியபுராணம். இதனைத் திருத்தொண்டர் புராணம் என்றும், திருத்தொண்டர் மாக்கதை என்றும் கூறுவர். இதன் ஆசிரியர் சேக்கிழார். சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழி நூலாகவும் கொண்டு, பெரியபுராணம் ஒரு பெருங்காப்பியமாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு காண்டங்களையும், 13 சருக்கங்களையும், 4287 விருத்தப் பாக்களையும் இந்நூல் கொண்டுள்ளது. 63 தனியடியார்கள் வரலாறுகளும், 9 தொகையடியார்களது சிறப்புக்களும் இந்நூலுள் விரித்துரைக்கப்படுகின்றன. சமய, சமூக, பண்பாட்டு வளர்ச்சியில் இந்நூல் ஆற்றியிருக்கும் பங்கு பெரிது.

## நூலாசிரியர்-சேக்கிழார்

பெரியபுராண நூலாசிரியர் சேக்கிழார். தொண்டை நாட்டில் குன்றத்தூரில் பிறந்தவர். இவர் வேளாளர் குலத்தில், சேக்கிழார் குடியில் வந்தவர். இயற்பெயர் அருண்மொழித் தேவர் என்பது. இவர், அநபாயன், அபயன், திருநீற்றுச்சோழன் முதலிய பட்டப்பெயர்களை உடைய,



www.saivamonline.com

இரண்டாம் குலோத்துங்க சோழன் அவையில் முதல் அமைச்சராகத் திகழ்ந்தார். சோழன் இவருக்கு, உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டம் அளித்துச் சிறப்பித்தான். அக்காலத்தில் திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணி என்ற இன்ப நூலில், சோழன் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தான். மன்னனைச் சைவ நாட்டம் உடையவனாக மாற்றச் சிவன் அடியார் வரலாறுகளைச் சேக்கிழார் அவ்வப்போது எடுத்துரைத்து வந்தார். சோழன் அவற்றை விரும்பிக் கேட்டு , மகிழ்ந்து சைவ அடியவர்கள் வரலாற்றைத் தொகுத்து ஒரு காப்பியம் இயற்றித் தருமாறு சேக்கிழாரைக் கேட்டுக் கொண்டான்.

## தொண்டர் சீர் பரவுவார்

சேக்கிழார், சோழமன்னனின் வேண்டுகோளை ஏற்றுத் தில்லைக்குச் சென்று நடராசப் பெருமானை வணங்கி நின்றார். தில்லை அம்பலவன், 'உலகெலாம்' என்று, சேக்கிழாருக்கு அடி எடுத்துக் கொடுத்தான்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

என்ற வாழ்த்தை முதலாக அமைத்துக்கொண்டு திருத்தொண்டர் புராணத்தை இயற்றினார். சோழன் முன்னிலையில் இந்நூல் தில்லையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. நிறைவில், சேழன் சேக்கிழாரையும், பெரியபுராணத்தையும் யானை மீது ஏற்றி, தானும் பின் இருந்து கவரி வீசி, நான்கு வீதிகளிலும் ஊர்வலமாக அழைத்துச் சென்று பெருமை சேர்த்தான். தொண்டர் சீர் பரவுவார் என்ற பட்டத்தையும் அளித்துச் சிறப்பித்தான். சேக்கிழார் தில்லையிலேயே தவம் இருந்து, கூத்தப்பிரான் தாள்



www.saivamonline.com

மலர்களில் கலந்தார். இவர் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்பர்.

## சேக்கிழார் புராணம்

சேக்கிழார் வரலாற்றையும், பெரியபுராணத் தோற்றத்தையும் விரித்துரைக்கும் செய்யுள் நூல் ஒன்று தமிழில் உள்ளது. இந்நூலுக்குச் சேக்கிழார் புராணம் என்று பெயர். இதனை, திருத்தொண்டர் புராண வரலாறு என்றும் கூறுவர். இதனைத் தில்லை உமாபதி சிவாசாரியார் என்பவர் இயற்றியதாகக் கூறுவர். இந்நூலுள் 103 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலில்,

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி
ஒல்லை அவர் புராண கதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர் சேக்கிழார் அடி போற்றி
(சேக்கிழார் புராணம்-பாடல்.1)

என்ற பாடல், சேக்கிழார் வாழ்த்தாக அமைந்துள்ளது. சேக்கிழார் பெருமையையும், பெரியபுராணச் சிறப்புக்களையும் விரித்துரைக்கும் சில நூல்கள் பிற்காலத்தில் தோன்றின. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று, சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்பது. இதன் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை . இவர் சேக்கிழாரை

'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட
பாடிய கவி வலவ '

என்று போற்றிப் புகழ்ந்துள்ளார்.



www.saivamonline.com

## பெரிய புராணம்

தமிழில், பெருங்காப்பிய இலக்கணம் கூறும் சிறந்த நூல்கள் இல்லை. இருக்கும் ஒன்றிரண்டு நூல்களும்,வட மொழிக் காப்பியப் போக்கைக் கருத்தில் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. என்றாலும், பெருங்காப்பிய இலக்கணங்கள் பலவும் கொண்டதாகப் பெரியபுராணம் இயற்றப்பட்டுள்ளது. பெரியபுராணத்தின் முதல் நூல், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகை என்பது முன்னரும் கூறப்பட்டது. எனவே, சிவனடியார் வரலாறுகளைத் தொகுத்துத் தந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளையே காப்பியத் தலைவராகச் சேக்கிழார் கொண்டுள்ளார். காப்பியத்தின் முதல், இடை, கடை ஆகிய மூன்றிடத்தும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறுகளை விரித்துரைத்து, இடையிடையே அவரால் போற்றி வணங்கப்பட்ட அடியவர்கள் வரலாறுகளையும் விளக்கி உரைத்து, மிக நுட்பமாக இப்பெருங்காப்பியத்தைச் சேக்கிழார் படைத்தளித்துள்ளார். காப்பியக் கதையைக் கயிலாயத்தில் தொடங்கி, மீண்டும் கயிலாயத்தில் கொண்டு போய் நிறைவிக்கும் அருமை, சேக்கிழாரின் காப்பியப் புனைவிற்குச் சான்று கூறி நிற்கிறது.

## காப்பியப் பகுப்பு

பெரியபுராணம் காப்பிய இலக்கணங்களுக்கு ஏற்ப முதற்காண்டம், இரண்டாம் காண்டம் என இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளது. பெருங்காப்பியங்களின் உட்பிரிவு களுக்குப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. சேக்கிழார் சருக்கம் என்ற சொல்லைப் பயன் கொண்டுள்ளார். முதல் காண்டத்தில் 5 சருக்கங்களும், இரண்டாம் காண்டத்தில் 8 சருக்கங்களும் இடம் பெற்றுள்ளன. திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றுள்ள 11 பாடல்களின் தொடக்கமே



www.saivamonline.com

சருக்கங்களுக்குப் பெயராகச் சூட்டப்பட்டுள்ளன. உதாரணமாகத் திருத்தொண்டத் தொகையின் முதற்பாடல், தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று தொடங்கியுள்ளதால், அப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியார் வரலாறுகளை விரித்துரைக்கும் பகுதிக்குத் தில்லைவாழ் அந்தணர் சருக்கம் என்றே ஆசிரியர் பெயர் சூட்டியுள்ளார். முதல் சருக்கமாகக் கயிலாயமலைச் சிறப்புரைக்கும், திருமலைச் சருக்கத்தையும், இறுதியாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலாயம் சென்றடைந்த செய்திகளைக் கூறும் வெள்ளானைச் சருக்கத்தையும் அமைத்துக்கொண்டு, திருத்தொண்டத்தொகைப் பாடல்களை முதன்மையாகக் கொண்ட 11 சருக்கங்களையும் இடையில் வைத்துச் சேக்கிழார் அற்புதமாகக் காப்பியக் கட்டமைப்பைச் செய்துள்ளார்.

## யாப்பமைதி

சேக்கிழாரின் பெரியபுராணம் முழுவதும், அக்காலத்தில் பெருவழக்கில் இருந்த யாப்பு முறைகளையே பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. கீழ்வரும் பட்டியல் கொண்டு, பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள பல்வகை யாப்பு வகைகளையும், அந்தஅந்த யாப்பில் அமைந்துள்ள பாடல் தொகைகளையும் தெரிந்துகொள்ள முடியும்.

| வ.எண். | யாப்பு வகை | பாடல்தொகை |
|---|---|---|
| 1. | அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் | 1805 |
| 2. | எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் | 75 |
| 3. | எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் | 280 |
| 4. | தரவு கொச்சகக் கலிப்பா | 1207 |
| 5. | கலி நிலைத்துறை | 545 |



www.saivamonline.com

| | | |
|---|---|---|
| 6. | கலி விருத்தம் | 368 |
| 7. | வஞ்சி விருத்தம் | 6 |
| | கூடுதல் பாடல்கள் | 4286 |

இதில் பெரியபுராணத்தின் நிறைவில் இணைக்கப் பட்டுள்ள வையம் நீடுக என்ற பாடல் சேர்க்கப்படவில்லை. மேற்கண்ட அட்டவணை சமயக்காப்பியம் பாடுவதற்கும், பக்திச் சுவையை நிலைநாட்டுவதற்கும் விருத்தப்பாக்களும், கலிப்பாக்களும் சிறந்த யாப்பு முறைகள் என்பதை அறிவிக்கிறது.

## திருமலைச் சருக்கம்

பெரியபுராணத்தின் முதற்பகுதியாகிய திருமலைச் சருக்கம். 1. பாயிரம், 2. திருமலைச் சிறப்பு, 3. திருநாட்டுச் சிறப்பு, 4. திருநகரச் சிறப்பு, 5. திருக்கூட்டச் சிறப்பு, 6. தடுத்தாட்கொண்ட புராணம் என்ற ஆறு உட்பகுதிகளையும், 394 பாடல்களையும் கொண்டு நடையிடுகிறது. காப்புப் பகுதியில் முதல் இரண்டு பாடல்கள் தில்லைக் கூத்தனையும், எடுக்கும் மாக்கதை என்று தொடங்கும் மூன்றாவது பாடல் விநாயகனையும் வணங்குவதாக அமைந்துள்ளன. காப்புப் பகுதியில், அடியார் திருக்கூட்டம் விளக்கம் பெற ஒரு பாடலும், அவையடக்கப் பகுதியில் 5 பாடல்களும், நூல் பெயர் கூறும் பாடல் ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

இங்கிதன் நாமம் கூறின்
　　இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள்
　　சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப்
　　புறஇருள் போக்குகின்ற



www.saivamonline.com

செங்கதிரவன் போலநீக்கும்
திருத்தொண்டர் புராணம் என்பாம்
(பெரியபுராணம்-10)

என்னும் பாடல் இந்நூல் பெயரைப் பதிவு செய்கிறது.

## பெரியபுராணம் காப்பு

காப்புப் பகுதியில் விநாயகர் வாழ்த்தில், எடுக்கும் மாக்கதை என்ற ஒரு தொடர் வருகிறது. மா என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பெரிய என்பது பொருள். எனவே, மாக்கதை என்ற தொடருக்குப் பெருங்கதை என்று பொருள் கொண்டிருக்கலாம். முன்னரே, தமிழில் பெருங்கதை என்ற ஒரு நூல் இருப்பதால், இதனை வேறுபடுத்தி அறிவதற்குப் பெரிய புராணம் என்று இந்நூலை முன்னோர் அழைத்திருக்கலாம். அவையடக்கத்தில் அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார் என்ற ஒரு தொடர் வருகிறது. பெருமையர் என்ற சொல் பெருமை மிக்கவர், பெரியார் என அழைக்கப்பட்டு, பெருமைமிக்க அடியார் வரலாறு என்ற பொருளில், பெரியபுராணம் என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். செயற்கரிய செயல் செய்தவர்களைத் திருவள்ளுவர், பெரியார் என்கிறார். நாயன்மார் வரலாற்றில் பலரும், செயற்கரிய செயல் செயதவரே ஆவர். சேக்கிழாரும் பல இடங்களில் அடியார் செயல்களைச் செயற்கரிய செயல் என்று குறிப்பிட்டுள்ளார். அதுபற்றியும் பெரியபுராணம் என்ற பெயர் அமைந்திருக்கலாம்.

## திருமலைச் சிறப்பு

திருமலைச் சிறப்பில், கயிலாய மலையின் இயற்கை எழிலும், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திரு வோலக்கமும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. உபமன்யு முனிவர்,



www.saivamonline.com

சீடர்களுக்குச் சுந்தரர் வரலாறு உரைக்கும் போக்கில் காப்பியமும் இங்கேயே தொடங்கிவிடுகிறது. காப்பிய நாயகர் பெருமையை,

தம்பிரானைத் தன் உள்ளம் தழீ இயவன்
நம்பி யாரூரன் நாம் தொழும் தன்மையன் (29)

என்று உபமன்யு முனிவர் கூற்றாகச் சேக்கிழார் பதிவு செய்கிறார். ஒரு காதலால், தென்தமிழ்நாடு அடியவர் பெருமை அறிந்து மகிழும் பேறு பெற்றது என்பதனை,

மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப்
போதுவான் அவர்மேல் மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார் (35)

எனச் சேக்கிழார் காப்பிய நுட்பமும், நயமும் தோன்றக் குறித்துக் காட்டுகிறார்.

## திருநகரச் சிறப்பு

பெருங்காப்பியங்களில், காப்பியத் தலைவன் பிறந்த நாட்டையும், நகரத்தையும் சிறப்பித்தல் மரபு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிறந்த நாடு, திருமுனைப்பாடி நாடு. நகரம், திருநாவலூர். ஆனால் சேக்கிழார், அவற்றைப் புனைந்து பாடாது, சோழநாட்டையும், திருவாரூரையும் புனைந்து போற்றுகிறார். இதற்கான காரணம் தெளிவாகப் புலப்படவில்லை. தம்மை ஆதரித்துப் பெரியபுராணம் பாடச் செய்த சோழர்கள் பால் கொண்ட நன்றி உணர்ச்சியால் இவ்வாறு பாடியிருக்கலாம். அல்லது, சுந்தரமூர்த்தி சுவாமிகள் வருகையின் நோக்கமாக அமைந்த திருத் தொண்டத் தொகை பிறந்த ஊர், திருவாரூர் என்பதால் அதனையும், சோழநாட்டையும் சேக்கிழார் பாடியிருக்கலாம். இரண்டாவது காரணமே சேக்கிழாருக்குப் பெருமை



www.saivamonline.com

சேர்ப்பதாக அமையும். நகரப் பெருமை கூறும் நகரச் சிறப்பு என்ற பகுதியில், மனுநீதிச்சோழன் வரலாற்றைச் சேக்கிழார் விரித்துப் பாடியுள்ளார். இதற்கான உண்மைக் காரணமும் தெரியவில்லை.

## திருக்கூட்டச் சிறப்பு

முதற்சருக்கத்தில் இடம் பெற்றுள்ள திருக்கூட்டச் சிறப்பில், சைவ அடியார்களின் அளவற்ற பெருமைகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. சைவ அடியார்கள், புறத் தூய்மையும், அகத் தூய்மையும் மிக்கவர்கள் என்பதை,

> பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள் *(141)*

என்றும், அன்னார் இன்ப, துன்பங்களால் பாதிப்பு அடையாது, பொன் பொருள்களில் நாட்டம் இல்லாதவர்கள் என்பதனை,

> கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
> ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
> கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
> வீடும் வேண்டா விறலின் விளங்கினார் *(143)*

என்றும், அடியவர்தம் அகம் மற்றும் புறத்தூய்மைகளை,

> ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
> பாரம் ஈசன் பணிஅலது ஒன்றிலர்
> ஈர அன்பினர் யாதுங் குறைவிலர்
> வீரம் என்னால் விளம்பும் தகையதோ *(144)*

என்றும் சேக்கிழார் இனங்காட்டிப் பெருமை சேர்க்கிறார்.

## தடுத்தாட்கொண்ட புராணம்

முதற்சருக்கத்தின் ஆறாவது பகுதி, தடுத்தாட்கொண்ட புராணம். பெரியபுராணத்தின் மிக உன்னதமான பகுதி இது



www.saivamonline.com

என்று கூறலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதாரம் தொடங்கி, திருத்தொண்டத்தொகை பாடப்படும் வரை, இப்பகுதி 203 பாடல்களில் நடையிடுகிறது. பெருங் காப்பியங்களில் இடம்பெற வேண்டிய பல பகுதிகள், இப்புராணப் பகுதியில் அற்புதமாக இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன. இயற்கை வருணனைகளும், அழகிய கற்பனைகளும் இங்கே இடம் பெற்றுள்ளன.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின் அவதாரம், திருவெண்ணெய்நல்லூர் அரசன் நரசிங்கமுனையரையன், சுந்தரரை அரண்மனையில் அன்பு பாராட்டி வளர்த்தமை, புத்தூர் சடங்கவி சிவாசாரியார் மகளை மணம் பேசியமை. திருமணத்தில் சிவபெருமான் முதிய வேதியராய் எழுந்தருளி ஓலை காட்டித் திருமணத்தைத் தடுத்துச் சுந்தரரை ஆட்கொண்டமை.திருவெண்ணெய் நல்லூர்ச் சிவாலயமாகிய திருவருட்துறையில் சிவபெருமான் மறைந்து, தம்மைப் பாடுமாறு பணித்தமை. எவ்வாறு பாடுவது என்று சுந்தரர் திகைத்து நின்றபோது, 'பித்தா' என்று அடி எடுத்துக் கொடுத்துச் சிவபெருமான் பாடுமாறு செய்தமை என்றெல்லாம் நிகழ்வுகள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

அன்பில் பெருகிய சிறப்பில்மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொல்தமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்

என்ற அழகிய தமிழ்மொழியின் சிறப்புரைக்கும் இறைமை சார்ந்த மொழிகளும்,

முன்பு எனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே
என்பெயர் பித்தன் என்றே பாடுவாய்

என்ற திருவருட் குறிப்பு மொழிகளும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.



www.saivamonline.com

## பரவையார் திருமணம்

மேலும் தலயாத்திரை மேற்கொண்ட சுந்தரர், திருத்துறையூரில் தவநெறி அருளப்பெற்றதும், திருவதிகை எல்லைப் பகுதியில், சிவன் திருவடி சூட்டப் பெற்றதும், தில்லைச் சிற்றம்பலவனை வணங்கிப் பேரின்ப வெள்ளத்துள் திளைத்ததும், தோணிபுரத்தில்(சீகாழி) இறைவன் திருக்காட்சிக் காட்டக் கண்டு மகிழ்ந்ததும், திருவாரூரில் இறைவன் தம்மைச் சுந்தரருக்குத் தோழமையாகத் தந்ததும், சுந்தரர் தம்பிரான் தோழர் என அழைக்கப்பெற்றதும், முன்னைய இறைவன் குறிப்பால் திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்திருந்த பரவையாரைக் கண்டு, ஆரூர்ப் பெருமான் அருள் துணையோடு அவரை மணந்து மகிழ்ந்ததும், இப்பகுதியில் நிரல்பட விரித்துரைக்கப் பட்டுள்ளன. இன்பத்தில் திளைக்கும் போதும், அதிலிருந்து விடுபட்டு நீங்கி நிற்பதும், துன்பத்தில் துவளும் போதும் அதனால் பாதிப்படையாது நெஞ்சுறுதி கொண்டு நிமிர்வதும் சிலருக்கே வாய்க்கும். பரவையாரோடு இன்பம் துய்த்த காலத்தும் சுந்தரர், அவ்வின்பத்தில் திளையாது, யோக நெறி நின்றார் என்ற அரிய குறிப்பு இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

*பரவை என்னும் மெல்லியல்தன்*
*பொன்னாரும் முலைஓங்கல் புணர்குவடே சார்வாகப்*
*பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினார் (327)*

## முதல் நூல்

திருவாரூரில் வாழ்ந்து வரும் நாளில், திருக்கோயில் முன்பகுதியில் அமைந்திருந்த தேவாசிரியன் மண்டபத்தில், சிவன் அடியார் பலர் கூடியிருக்கக் கண்ட சுந்தரர், தாம் அன்னாருக்கு அடிமைபூண வேண்டும் என்று விரும்பினார். திருவாரூர் இறைவன், சிவன் அடியார்களின் பெருமைகளை



www.saivamonline.com

அசரீரியாக எடுத்துரைத்தான்.

பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பர் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரை நீ அடைவாய் (342)

என்று, அடியவர் பெருமையை இறைவன் எடுத்துக் கூறக்கேட்ட சுந்தரர் மகிழ்ந்தார். இறைவன் அடியார் பெருமைகளை விரித்து நீ பாடுக என்று ஆணையிட்டு, 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடி எடுத்துக் கொடுத்து அருளினார். சுந்தரர், சிவன் அருள் கட்டளையை ஏற்று 11 பாடல்களால், அடியவர் பெருமை கூறும் வரலாற்றுச் சிறப்புமிக்க, திருத்தொண்டத்தொகை என்ற பதிகத்தைப் பாடி வழங்கினார். அதில் முன்குறித்தவாறு 60 தனியடியார்கள் மற்றும் 9 தொகையடியார்கள் பெயர்கள் இடம் பெற்றிருந்தன. அவ்வடியார் வரலாற்றை இனி நான் விரித்துரைப்பேன் என்று கூறிச் சேக்கிழார், நாயன்மார் வரலாறுகளை இரணடாவது சருக்கம் முதலாக விரித்துரை செய்துள்ளார்.

## திருத்தொண்டத்தொகை- அமைப்பு

திருத்தொண்டத்தொகையில், ஆண் அடியார்கள் 58 பேரும், பெண் அடியார்கள் இருவரும் இடம் பெற்றுள்ளனர். சேக்கிழார், காப்பிய நாயகராகிய சுந்தரர், அவர் தந்தை சடையனார், தாயார் இசைஞானியார் ஆகிய மூவரையும் இணைத்து, நாயன்மார் தொகையை 63 ஆக உயர்த்தியுள்ளார். பெண் அடியவர்கள் மூவருள், இசைஞானியார் வரலாறு சுந்தரர் வரலாற்றுடன் இணைந்து வந்துவிடுகிறது.



www.saivamonline.com

மங்கையர்க்கரசியார் வரலாறு திருஞானசம்பந்தர் வரலாற்றுள் விரித்துரைக்கப்பட்டுவிடுகிறது. எனவே, இவ்விருவர் வரலாறுகளும் தனியே மிகச்சுருக்கமாகவே பாடி அமைக்கப்பட்டுள்ளன. காரைக்காலம்மையார் வரலாறு ஒன்று மட்டுமே 66 பாடல்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளது. திருத்தொண்டத்தொகையில் இடம்பெறாது, அடியவர்கள் அருள் வரலாற்றில் இடம்பெற்றுள்ள திலகவதியார், திருவெண்காட்டு நங்கை, கமலவதி முதலாகிய பல பெண்களும் இந்நூலுள் பெரிதும் போற்றப்பட்டுள்ளனர். பெரிய புராணத்துள் இடம் பெற்றுள்ள மதிப்புமிக்க பெண்களைச் சேக்கிழார், அவள், வந்தாள் என்ற பெண்பால் விகுதிகளை விடுத்து, அவர், வந்தார் என்ற பலர்பால் விகுதிகளால் போற்றியிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

## தொகை அடியார்கள்

இவர், இன்னார் என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலாத வேறு பலரையும், தம் காலத்துக்கு முன்பும், பின்பும், வாழ்ந்தவர்களையும், வரவிருப்பவர்களையும் போற்றும் நோக்கில் தொகையடியார் வணக்கத்தைச் சுந்தரர் மேற்கொண்டுள்ளார். வரலாற்று எல்லைக்குள் உட்படாதவர்களையும், வரலாற்றுப் பார்வையில் கிட்டாதவர்களையும், சிறப்பிக்கும் சுந்தரரின் இப்பண்பு, பெருஞ்சிறப்புக்கு உரியது. நால்வரில் ஒருவராகிய மாணிக்கவாசகர் பெயர், திருத்தொண்டத் தொகையில் இடம்பெறவில்லை. காரணம் அவர் சுந்தரர் காலத்துக்குப் பின்வந்தவராதல் வேண்டும். இவ்வாறான தொகையடியார்களை ஒரு அட்டவணையின் வாயிலாக அறிந்துகொள்வது பயனுடையதாக அமையும்.

| வ.எண். | தொகை அடியார் | பாடல் எண். |
|---|---|---|
| *1.* | தில்லைவாழ் அந்தணர் | *10* |



www.saivamonline.com

| | | |
|---|---|---|
| 2. | பொய்யடிமை இல்லாத புலவர் | 3 |
| 3. | பத்தராய்ப் பணிவார்கள் | 8 |
| 4. | பரமனையே பாடுவார்கள் | 2 |
| 5. | சித்தத்தைச் சிவன்பால் வைத்தார் | 1 |
| 6. | திருவாரூர்ப் பிறந்தார் | 2 |
| 7. | முப்போதும் திருமேனி தீண்டுவார் | 3 |
| 8. | முழுநீறு பூசிய முனிவர் | 6 |
| 9. | அப்பாலும் அடிச்சார்ந்தார் | 2 |
| | கூடுதல் பாடல்கள் | 37 |

## தனியடியார்கள்

பெரியபுராணப் பெண் அடியார்கள் மற்றும், தொகை அடியார்கள் அறிமுகத்திற்குப் பின்னர், ஆண் அடியவர்கள் வரலாறுகளைக் காணலாம். இரண்டாவது சருக்கம் தொடங்கிப் பின்வரும் சருக்கங்களில் 60 ஆண் அடியார்களின் வரலாறுகளும், திருத்தொண்டத்தொகை வரிசையில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழியில் அமைந்த பிற புராணங்கள் பலவும், வரலாற்று நோக்கில் அமைந்தன அன்று. சேக்கிழார் வரலாற்றுத் தரவுகளை நாடு முழுதும் சென்று நேரில் கண்டு, திரட்டி, முறைப்படுத்திக்கொண்டு, இந்நூலை ஒரு வரலாற்றுப் பெருங்காப்பியமாகவே படைத்துள்ளார். இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், செவிவழிச் செய்திகள் யாவும் அவரால் உற்றுநோக்கி அறியப்பட்டுள்ளன. நன்கு அறிந்து தெளிந்த உண்மைகளை மட்டுமே இவர் பதிவு செய்கிறார். கற்பனைப் பதிவுகளில் இவருக்கு நாட்டம் இருந்திருக்கவில்லை. பூகோள அறிவும், காலக்கணக்குகளும், நில இயல்புகளும், இயற்கை அமைப்புகளும் மிகத் துல்லியமாக இந்நூலுள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே, பெரியபுராணத்தை ஒரு வரலாற்றுக் காப்பியமாகக் கொள்ள முடிகிறது.



www.saivamonline.com

## நாயன்மார்-குலமரபு

திருஞானசம்பந்தர் அருள் வரலாறே, இந்நூலுள் அதிகப் பாடல்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளது. 4287 பாடல்களில், திருஞானசம்பந்தர் புராணம் மட்டுமே 1256 பாடல்களால் பாடப்பெற்றுள்ளது. திருநாவுக்கரசர் வரலாறு 429 பாடல்களால் நடையிடுகிறது. ஏனைய வரலாறுகள், கிடைத்திருக்கும் செய்திகளின் அளவிற்கு ஏற்ப விரித்தும், சுருக்கியும் பாடப்பெற்றுள்ளன. நாயன்மார்கள், அக்காலத்தில் நிலவிய பல்வேறு குலங்களையும், சாதிகளையும் சார்ந்தவர்கள். சைவம் என்ற ஒரு பெரிய வட்டத்துள், சாதி வேறுபாடுகள் கருதாது, மனித குலத்தை ஒருங்கிணைக்கும் அரிய முயற்சி பெரியபுராணத்துள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடியவர்களுள் வேளாளர் 13, அந்தணர் 12, முடியரசர் 6, மரபு இன்னது என்று தெரியாதவர் 6, குறுநில மன்னர் 5, வணிகர் 5, ஆதிசைவர் 4, இடையர் 2, ஏனைய குலத்தோர் 10. இவர்கள் சோழநாடு, நடுநாடு, தொண்டை நாடு, பாண்டி நாடு, மலை நாடு, கோனாடு, மழ நாடு என்ற பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இன்ன நாட்டினர் என்ற குறிப்பு 9 அடியவர்களில் இல்லை.

## தனி அடியார் - அட்டவணை

பெரியபுராண அடியவர்கள் வரலாற்றை விரித்துரைக்கும் வாய்ப்பு இப்பகுதியில் இல்லை. ஆயினும், அவர்கள் பெயர்கள் இன்னது என்று தெரிந்துகொள்வது நலம் பயக்கும். அகரவரிசையில், கீழ்க்கண்ட அட்டவணையில், அவர்கள் பெயர்கள் மட்டும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.



www.saivamonline.com

1.அதிபத்தர்
2. அப்பூதியடிகள்
3. அமர்நீதிநாயனார்
4. அரிவாட்டாய நாயனார்
5. ஆனாய நாயனார்
6. இடங்கழி நாயனார்
7. இயற்பகை நாயனார்
8. இளையான்குடி மாறர்
9. உருத்திர பசுபதியார்
10. எறிபத்த நாயனார்
11. ஏயர்கோன் கலிக்காமர்
12. ஏனாதிநாத நாயனார்
13. ஐயடிகள் காடவர்கோன்
14. கணநாத நாயனார்
15. கணம்புல்ல நாயனார்
16. கண்ணப்ப நாயனார்
17. கலிக்கம்ப நாயனார்
18. கலிய நாயனார்
19. கழறிற்றறிவார்
20. கழற்சிங்க நாயனார்
21. காரி நாயனார்
22. காரைக்காலம்மையார்
23. குங்கிலியக் கலயர்
24. குலச்சிறை நாயனார்
25. கூற்றுவ நாயனார்
26. கோச்செங்கட் சோழர்
27. கோட்புலி நாயனார்
28. சடைய நாயனார்
29. சண்டேசுவர நாயனார்
30. சத்தி நாயனார்
31. சாக்கிய நாயனார்
32. சிறப்புலி நாயனார்
33. சிறுத்தொண்டநாயனார்
34. செருத்துணை நாயனார்
35. சோமாசி மாறர்
36. தண்டியடிகள்
37.திருக்குறிப்புத் தொண்டர்
38. திருஞானசம்பந்தர்
39. திருநாவுக்கரசர்
40. திருநாளைப் போவார்
41. திருநீலகண்டர்
4 2
திருநீலகண்டயாழ்ப்பாணர்
43. திருநீலநக்கர்
44. திருமூல நாயனார்
45.நமிநந்தியடிகள்
46. நரசிங்கமுனையரையர்
47. நின்றசீர் நெடுமாறர்
48. நேச நாயனார்
49. புகழ்ச்சோழநாயனார்
50. புகழ்த்துணை நாயனார்
51. பூசலார் நாயனார்
52. பெருமிழலைக்குறும்பர்
53. மானக்கஞ்சாற நாயனார்
54. முருக நாயனார்
55. முனையடுவார் நாயனார்
56. மூர்க்க நாயனார்
57. மூர்த்தி நாயனார்
58. மெய்ப்பொருள் நாயனார்
59. வாயிலார் நாயனார்
60. விறன்மிண்ட நாயனார்
61. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
62. சடைய நாயனார்
63. இசைஞானியார்



www.saivamonline.com

## காப்பிய உள்ளீடு - நூல் செய்தோர்

பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள தனி அடியார்களுள் சிலர், சைவ சமயத்திற்கு அருந்தொண்டுகள் இயற்றியதோடு, தாமே சைவ சமயம் குறித்துத் தனிப்பாடல்களையும், பதிகங்களையும், சிற்றிலக்கியங் களையும் படைத்தளித்துள்ளனர். கழறிற்று அறிவார் என்ற பெயர் கொண்ட சேரமான் பெருமாள் நாயனார் 1. திருவாரூர் மும்மணிக்கோவை, 2. பொன் வண்ணத்தந்தாதி, 3. திரு உலாப்புறம் (திருக்கயிலாய ஞான உலா) என்ற நூல்களைப் படைத்தளித்துள்ளார். காரி நாயனார் என்பவரால் காரிக்கோவை என்ற ஒரு நூல் படைத்தளிக்கப்பட்டதாகச் சேக்கிழார் குறித்துள்ளார். அந்நூல் இன்று கிடைக்கவில்லை. காரைக்கால் அம்மையார், 1. இரட்டை மாலை அந்தாதி (திரு இரட்டை மணிமாலை), 2. அற்புதத் திருவந்தாதி, 3.மூத்த திருப்பதிகம் முதலிய சிறு நூல்களை ஆக்கி அளித்துள்ளார். ஐயடிகள் காடவர்கோன் சேத்திரத் திருவெண்பா பாடியுள்ளார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய பதிகப் பாமாலைகள் குறித்து முன்னரே விளக்கப்பட்டுள்ளன. திருமூலர் திருமந்திர மாலை ஆக்கித் தந்துள்ளார். தம் காலத்துக்கு முற்பட்ட இந்நூல்கள் யாவற்றையும் நன்கு ஆராய்ந்து அறிந்தே சேக்கிழார், பெரியபுராணம் பாடியுள்ளார் என்பது நன்கு தெளிவாகிறது.

### சைவ சமய உண்மைகள்

சைவ சமயம் தொடர்பான பல உண்மைகள் குறித்துப் பெரியபுராணம் விரிவான விளக்கங்களைத் தருகிறது. சைவ



www.saivamonline.com

சமயத்தில், சிவலிங்க வழிபாடு தொன்மையானது. சிவலிங்கத் திருமேனியின் உண்மை குறித்துச் சேக்கிழார்,

> காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
> நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்
> (பெரிய.3648)

சிவலிங்கம் என்பது, உருவமும் அன்று. உருவம் அற்றதும் அன்று. அருவமும் உருவமும் கலந்த ஒரு வழிபாட்டுச் சின்னம் என்று சேக்கிழார் விளக்கம் தருகிறார். சைவத்தில் இறைவனை வீழ்ந்து வணங்கும் முறைகள் இரண்டு உண்டு. அவை.1. பஞ்சாங்க நமஸ்காரம், 2. அட்டாங்க நமஸ்காரம். இதில் பஞ்சாங்க நமஸ்காரம் என்பது,

> மண்ணுற ஐந்து உறுப்பால் வணங்கி (270)

என்றும், அட்டாங்க நமஸ்காரம் என்பது,

> அங்கம் மாநிலத்து எட்டுற வணங்கி (2856)

என்றும் சேக்கிழாரால் விளக்கப்பட்டுள்ளன. இரண்டு கால், இரண்டு கை, தலை என்பன ஐந்து உறுப்புகள். இத்துடன் மார்பு, இரண்டு காதுகள் தோய்வது எட்டு உறுப்புகள்.

## சிவபெருமான்-அருள்திறம்

சைவ சமயக் காப்பியம் என்பதற்கு ஏற்பச் சிவபெருமானின் அடையாளங்களையும், அருட் செயல்களையும், வீரநிகழ்வுகளையும் சேக்கிழார், தம்நூலுள் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

> தன்னை யார்க்கும் அறிவரியான் (11)



www.saivamonline.com

*இன்ன தன்மையன் என்று அறியாச் சிவன் (23)*

*அருமறை முறையிட்டு இன்னும் அறிவதற்கு அரியான் (192)*

*அடியார் இடுக்கண் தரியாதார் (3483)*

*எவ்வுயிர்க்கும் தாயானான் (2385)*

*கருச்சுற்றில் அடையாமல் கைதருவார் (2294)*

*அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்ற பிரான் (4163)*

*தொல்உலகம் முழுவதும் அளித்து அழித்து*
*ஆக்கும் முதல்வர் (3444)*

*தேவரையும் மால் அயன்முதல் திருவின்மிக்கோர்*
*யாவரையும் வேறு அடிமையா உடைய எம்மான் (183)*

*முன்னாகி எப்பொருட்கும் முடிவாகி நின்றான் (1421)*

*முந்தை மறை ஆயிரம் மொழிந்த திருவாயான் (179)*

*புண்ணியப் பொருளாய் நின்றான் (385)*

எனவரும் பெரியபுராணத் தொடர்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடையன.

## வரலாற்றுக் காப்பியம்

பெரியபுராணம், ஒரு வரலாற்றுக் காப்பியம் என்பதற்கு ஏற்பச் சேக்கிழார், இந்நூலுள் பல வரலாற்றுச் செய்திகளை உள்ளவாறு பதிவு செய்துள்ளார். 1. ஆதித்த சோழன் தில்லை அம்பலத்திற்குப் பொன் வேய்ந்தமை, 2. இமயமலையில் சோழன் புலி இலச்சினை பொறித்தமை, 3. ஒரு காலத்தில், பெண்ணை ஆறு துறையூரின் தெற்கில் ஓடியது. 4.



www.saivamonline.com

காஞ்சிபுரத்தைக் கரிகால் பெருவளத்தான் புதுக்கியது. 5. அகத்தியர் காவிரியை வரவழைத்தது. 6. இலக்குமி திருவாரூரில் வழிபட்டது. 7. உபமன்யு முனிவர், கண்ணனுக்குச் சிவதீட்சை செய்வித்தது. 8. உமை அம்மை காஞ்சிபுரத்தில் சிவபூசை செய்தது. 9. உமையம்மைக் காஞ்சியில் முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தது. 10.சிவபூசை செய்து பரசுராமன் பரசு என்ற ஆயுதம் பெற்றது. இவ்வாறான வரலாற்றுப் பதிவுகள், மேலும் பல பெரியபுராணத்துள் இடம் பெற்றுள்ளன.

## காப்பிய எழில் - உவமை அழகு

ஒரு பெருங்காப்பியத்திற்குக் கற்பனை, வருணனை, உவமை முதலிய அணிகள் மேலும் அழகு சேர்ப்பன. பக்திக் காப்பியம் என்பதால் சேக்கிழார், உவமைகளில் எல்லாம் பக்தி மணம் கமழக் காண்கிறோம். வஞ்சகத்தை உள்ளத்தில் வைத்துக்கொண்டு, பொய் வேடம் தரித்து வந்தவனை,

> மைபொதி விளக்கே என்ன
> மனத்தினுள் கருப்பு வைத்து (473)

என்று உவமித்துக் காட்டுகிறார். சிவனடியார் வீரத்திற்கு முன் நிற்கமாட்டாது புறங்கொடுத்து, வஞ்சகப் பகைவன் ஓடுவதை,

> கதிரோன் எழ மழுங்கிக்
> கால்சாயும் காலை
> மதிபோல் அழிந்து பொறா
> மற்றவன் (615)

என உவமித்து மகிழ்கிறார். நல்ல அன்பு நிறைந்த பிள்ளையின் தந்தை, குணமற்றவனாக இருப்பதை விளக்கும் இடத்தில்,



www.saivamonline.com

பாம்பு மாணிக்கத்தையும் அளித்து, நஞ்சினையும் கக்கும் தன்மைபோல் என்று உவமிக்கிறார். இறைவனைக் கண்டு, கண்ணப்பர் விட்டு நீங்காத தன்மையை,

வங்கினைப் பற்றிப் போதா
வல்உடும்பு என்ன நீங்கான் (765)

என உடும்பின் தன்மையோடு ஒப்புமை காட்டுகிறார். இவ்வாறான உலகியல் கலந்த உவமைகள் பல, இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

## கற்பனைப் புனைவு

பெரியபுராணத்தில், அழகிய கற்பனைகளும் நயமுற அமைந்துள்ளன. வேதியர்கள் கொழுந்துவிட்டு எரியும் வேள்வித் தீயில், மாவிலைகளைக் கொண்டு, நெய்யை முகந்து வார்த்து வேள்வி வேட்பர். திருஞானசம்பந்தர் அவதரித்த சீகாழியில், இயற்கையே வேள்வி செய்வதாகச் சேக்கிழார் கற்பனை செய்கிறார். மாமரங்கள் வயல்களின் ஓரங்களில் தழைத்துள்ளன. வயல்கள் எல்லாம் செந்தாமரைப் பூக்கள் மலர்ந்து கிடக்கும் காட்சி,அவற்றை வேள்விக் குண்டங்கள் போல் எண்ணச் செய்கின்றன. மரத்தில், மாங்கனிகள் முதிர்ந்து வெடித்து, அவற்றின் கொழுவிய சாறுகள் கீழே வழிகின்றன. அவை மாவிலைகளில் வீழ, மாவிலைகளின் நுனி வழியாக கனிச்சாறு கீழே தாரை தாரையாக இறங்க, இக்காட்சி, அவ்வூர் மரங்கள் எல்லாம் வேள்வி செய்வது போன்ற தோற்றத்தைத் தருகின்றன. மாம்பழச்சாறு, கெட்டிப்பட்டு இளகிய நெய்போலத் தோன்றும் ஒப்புமை நினைவுகூரத்தக்கது.



www.saivamonline.com

பரந்த விளை வயற் செய்யபங்கயமாம்
பொங்கு எரியில்
வரம்பில் வளர் தேமாவின் கனிகிழிந்த
மது நறு நெய்
நிரந்தரம் நீள் இலைக் கடையால் ஒழுகுதலால்
நெடிது அவ்வூர்
மரங்களும் ஆகுதி வேட்கும் தகைய என
மணந்துளதால் (1910)

என்பது மேற்குறித்த கற்பனை அமைந்த அழகிய பாடல்.

## பெரியபுராணம் - சமூக நோக்கு

எந்த ஒரு காப்பியமும் சமூகப் பயன்பாடு கொண்டதாக அமைய வேண்டும். அது தோன்றிய காலத்தில் நிலவியிருந்த சமூக அநீதிகளைக் கண்டித்து எதிர் நீச்சல் அடிக்கும் துணிவு, காப்பியப் படைப்பாளிக்கு வேண்டும். அத்தகு காப்பியங்களே சமூகத்தில் நின்று நிலவும். சாதி பேதங்களும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், ஆண்டான், அடிமைச் சமூக அமைப்பும் நிலவியிருந்த காலம், சேக்கிழார் காலம். இயன்ற வரை, சமய மரபுகளுக்கு மாறுபடாமல், சமூகத்தை நெறிப்படுத்த அவர் அரிய முயற்சி மேற்கொண்டிருந்தமையை உணர முடிகிறது.

முடியாட்சிக் காலத்தில், மன்னனின் நியாயமற்ற அழைப்பை ஏற்க மறுத்து, 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று, வீறு கொள்ளும் உரிமை முழக்கம் அங்கே கேட்கிறது.

தவறு நிகழுமானால், அரசனின் பட்டத்து யானையையும், பாகனையும் கொல்ல முடியும் என்பதை



www.saivamonline.com

எறிபத்தர் வீரத்தில் காண முடிகிறது. காந்தியடிகளுக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்னரே உண்ணா நோன்பையும், தனி மனிதச் சத்யாக்கிரகத்தையும் நாவரசர் மேற்கொண்டமை தெரிகிறது.

கோயில் பூசை செய்யும் சிவாசாரிய மரபில் வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், கணிகையர் குலத்தில் வந்த பரவையாரைக் கலப்பு மணம் புரிகிறார். இறைவனும் இதற்குத் துணை நிற்கிறான்.

நந்தனார் வரலாறு அக்காலத்தில் ஆதிதிராவிடர்கள், சிவாலயங்களுக்குள் சென்று வழிபடத் தடை இருந்தமையை எடுத்துக்காட்டுகிறது. ஆனால், திருஞானசம்பந்தராகிய வேதியர், தம் தேவாரப் பனுவல்களுக்கு இசைகூட்டி யாழ் ஒலி எழுப்ப, திருநீலகண்டயாழ்ப்பாணர் என்ற, கீழ்க்குடியில் வந்த அன்பரைத் திருக்கோயில் கருவறைவரை அழைத்துச் செல்கிறார். திருநீலநக்கர் தம் இல்லத்தில், வேள்வி மண்டபத்தில், கணவன் மனைவியாகப் பாணர் தம்பதியர் இரவில் படுத்து உறங்க அனுமதிக்கிறார். வணிகர் மரபில் வந்த சிவநேசர், தம் மகள் பூம்பாவையை, வேதியர் குலத்து வந்த திருஞானசம்பந்தருக்கு மணம் முடிக்க விரும்பியிருந்தார் என்று தெரிகிறது. பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டிருந்த காலத்தில், உலகத்தார் பார்வையில், வாழ்வை இழந்தவராகத் தோற்றம் தந்த திலகவதியார், திருநீறு வழங்கித் தம்பியாரை மதமாற்றம் செய்து சைவத்திற்கு மீட்டுள்ளார். ஒரு மடாதிபதிக்கு உரிய உரிமை, ஒரு பெண்ணுக்குச் சேக்கிழாரால் வழங்கப்படுகிறது.

## ஆட்சியாளர் திறம்

நாடாளும் மன்னர்கள், நெறி திறம்பாது ஆள வேண்டும்



www.saivamonline.com

என்பது முதலமைச்சராக இருந்த சேக்கிழார் விருப்பமாக அமைந்திருக்கிறது. மனுநீதிச் சோழன் வரலாறு, நாடாள்வோருக்கு மனுநீதியினும் மேம்பட்ட நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. பசுவின் கன்று தேர்க்காலில் அடிபட்டு இறந்தமைக்குப் பிராயச்சித்தம் போதும் என்று அமைச்சர்கள் கூறினர். மன்னன் ஒப்பவில்லை. கன்றை இழந்த பசுவின் துயரை, நான் என் மகனை இழந்து நின்று பெறுவதே அரச நீதி என்று மனுநீதிச் சோழன் கருதி, மகனைத் தேர்க்காலில் கிடத்தித் தேர் ஊர்ந்து நீதி செய்கிறான்.

> அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
> தன்நோய்போல் போற்றாக் கடை

என்ற குறளுக்குப் பெரியபுராணத்தில் ஒரு சான்றாக மனுநீதிச்சோழன் வரலாறு அமைகிறது. தம் பட்டத்து யானை இழைத்த தவறுக்காக, அதனைக் கொன்றது போதாது, யானைக்கு உரியவனாகிய என்னையும் கொல்ல வேண்டும் என்று கூறிய புகழ்ச்சோழர், கற்பார் நெஞ்சில் இடம் பிடிக்கிறார். முடியாட்சிக் காலத்திலேயே, இத்தகைய அரசர் வரலாறுகளைச் சேக்கிழாரால் மட்டுமே பாட முடிந்திருக்கிறது.

## பல்வகைச் சிறப்புகள்

பெரியபுராணம், பன்னிரு திருமுறைகளுள் ஒன்றாக அமைக்கப்பட்டிருந்த போதும், அது தனித்தன்மை உடையது என்பது இப்பகுதியில் எடுத்துக்காட்டப்பட்டது. இறைவனுக்கு இணையாக, இறையருள் பெற்று மனித குலத்திற்குத் தொண்டு செய்யும் மனிதர்களும், போற்றவும்



www.saivamonline.com

வணங்கவும் பட வேண்டும் என்பதைப் பெரியபுராணம் வற்புறுத்துகிறது. சாதிகளால் பிரிவுண்டு பிளவுண்டு நின்ற மனித குலத்தை, ஒரு சமயத்தை மையப்படுத்தி, ஒன்று படுத்த இயலும் என்பதைப் பெரியபுராணம் இனம் காட்டுகிறது. முடியாட்சிக்கு எதிரான தனி மனித உரிமைப் போராட்டத்திற்கும், இங்கே கால்கோள் விழா நடத்தப்பட்டுள்ளது. இயன்றவரை, பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் உள்ளார்ந்த முயற்சியில் சேக்கிழார் ஈடுபட்டிருப்பது தெரிகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர்கள், தெய்வங்களோடு, திருக்கோயிலுக்குள் திருவுருவமாக எழுந்தருளிப் பெருமை பெற இயலும் என்பதை இந்நூல் துணிவுடன் பறை சாற்றுகிறது. தமிழர் வாழ்வில் இந்நூல் ஏற்படுத்தியிருக்கும் பெருமிதங்கள் நீள நினைந்து போற்றப்பட வேண்டுவன.



www.saivamonline.com